# கொழும்பு துறைமுகத்தில் வேலைகள் ஸ்தம்பிதம்; வேலைநிறுத்தத்தின் விளைவு

Registered as a News paper in Ceylon விலைசதம் 15

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 90
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் சித்திரை 30 ஸபர் 24 திங்கட்கிழமை [12-5-69]

கொழும்பு, ஞாயிறு

கொழும்புத் துறைமுகத்தில் சுங்கப்பகுதியையும்மற்றும் சில பிரிவுகளையு- சேர்ந்த ஊழியர்கள் இன்று காலை முதல் வேலைநிறுத்தம் செய்துவருவதால் கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் ஸ்தம்பித்தன.

இரண்டு ஊழியர்களைதுறைமுகப் பொலிசார் இருவர் தாக்கியதாகவும் இதுபற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டுமென்றும் கோரியே இவர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பித்துள்ளனர்.

இரண்டு ஊழியர் துறைமுகத்துக்குள்ளிருந்து சில பொருள்களைக்கடத்த முயன்றபோது துறைமுகப் பொலிசார் இருவ கண்டு தடுத்து விசாரித்ததாகவும் அவர்களுக்கும் பொலிசாருக்குமிடையில்கைகலப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# சாதாரண பஸ்கள் ஓடவே வீதிகளின் அகலம் காணாது

## இந்நிலையில் 'டபிள்டெக்கர்'களா?

### யாழ். நகரில் விபத்து அதிகரிப்புக்கு காரணம் சொல்கிறார் பொலிஸ் அதிபர்

யாழ்ப்பாணம், திங்கள்

"யாழ்ப்பாண நகர எல்லைக்குள்ளிருக்கும் சகல வீதிகளும் சிறியனவாகவும், அகலம் குறைந்தனவாகவும், போதிய திருத்தம் இல்லாதவையாகவும் இருப்பதால் இங்கு சாதாரண பஸ்களை ஓடமுடியாதிருக்கின்றது. இந்த நிலையில் 'டபிள்டெக்கர்' பஸகள் சேவையிலிருப்பது பஸ்விபத்துக்களும், மற்றும் விபத்துக்களும் நடைபெற ஏதுவாக இருக்கிறது."

வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்று இவ்வாறு நமது நிருபரிடம் தெரிவித்தார்.

வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாண நகர எல்லைக்குள் தினமும் விபத்துக்கள் நடப்பது பற்றியும். இதில் கூடுதலானவை இ. போ. ச. பஸ் விபத்துக்களாகவே இருப்பது பற்றிக் குறிப்பிட்டு ...

முடியாதென்றும். கூடுதலானபஸ்விபத்துக்கள்இதனாலேயே இங்கு நடைபெறுகின்றதென்றும் குறிப்பிட்டார்.

ஒரு 'டபிள் டெக்கர்' பஸ் வீதியில் செல்லும்போது, அதனால் வீதி முழுவதுமே மறைக்கப்படுகின்றதென்றும், இதனால் அந்த பஸ் ... கண்டுகொள்ள முடியாமல், ...

காரணங்கள் என்றும் தெரிவித்தார்.

'டபிள் டெக்கர்' சேவை பற்றி இ. போ. ச. தலைவருக்குத் தான் அறிவிக்கவிருப்பதாகவும் தெரிவித்த ... லிஸ் சுப்பிரீண்டன்ட், ... களில் மிதிபலகைப் பிரயாணத்தை முற்றாகத்தடுக்க இன்று முதல் பொலிஸார் ... கண்காணி... ... வர் என்றும், ... பலகையில் பிரயாணிகளை கண்டக்டர்கள் ...

## அரசாங்கத்துடன்மீண்டும் தமிழரசார் சேருவராம்

கம்பஹா, ஞாயிறு

தமிழரசுக்கட்சியினர் இப்பொழுது அரசாங்கத்தை விட்டு வெளியேறினாலும், அவர்கள் மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்துகொள்வார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்று களனி எம். பி. திரு. ஆர். எஸ். பெரேரா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

உடுகம்பொல கிராமசபை தேர்தலில் போட்டியிடும் சுதந்திரக்கட்சி அபேட்சகர்களை அவர் ஆதரித்துப் பேசினார்.

அப்போது அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் பிரதமர் டட்லி சேனநாயக்கா நாட்டுக்கு ஒன்றுமே செய்யவில்லை. ஒரு சாராருக்கு மட்டும் அவர் உதவி அளித்துள்ளார். அதாவது யு. என். பி.க்கு ஆதரவு அளிக்கக்கூடிய ஒரு சிலருக்கே அவர் உதவி கிடைத்துள்ளது.

திரு. ரத்னதேசப்பிரிய பேசுகையில் அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எவையையும் நிறைவேற்றவில்லைஎன்று கூறினார் மற்றும் பலரும் பேசினர்.

## இன்று முதல் உரும்பராய் ஊரெழுவுக்கு மின்சாரம்

உரும்பராய், திங்கள் ராய்க்கும் பின்னர் ஊரெழு ...

## 'ஆஸ்பத்திரி வளவுக்குள் ஒரு தேவாலயம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வளவுக்குள் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றை நிறுவுவதற்கான முயற்சிகளை கத்தோலிக்கப் பிரமுகர்கள் சிலர் மேற்கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமாக சுகாதார சேவை டைரக்டருக்கு கடிதம் ஒன்று எழுதப்பட்டதைத் தொடர்ந்து யாழ் மாவட்ட சுகாதாரப்பகுதி சுப்பிரிண்டனும் பொது வேலைப்பகுதி இன்ஜினியரும் ஆஸ்பத்திரி வளவுக்குள் இதற்கான இடத்தைப் பார்வையிட்டனர்.

புதிதாகக் கட்டப்பட்ட சத்திர சிகிச்சை வார்ட்டுக்குப் பக்கத்தில் தேவாலயம் நிறுவப்படலாமென ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(கா. நி

## கல்வி அமைச்சர் திறந்து வைத்தார்

கோட்டை. ஞாயிறு

அரசாங்க சேவைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் தொழில் புரியும் தமிழ் ஊழியர்கள் சிங்களம் கற்பதற்கு வசதியளிக்குமுகமாக கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். எ. இரிய கொலை வெள்ளவத்தையில் ஒரு வயது வந்தவர் கல்வி நிலையம் ஒன்றை இம்மாதம் திறந்துவைத்தார். இதே நிலையத்தில் ஆங்கில வகுப்புகளும் நடைபெறவிருக்கின்றன.

## மாம்பழம் உற்பத்திபாதிப்பு

சென்னை, மே. 11

தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் இரண்டரை லட்சம் உதான் மாம்பழம் உற்பத்தியாவதுண்டென்றும் இம் முறை நிலவிய கடும் வரட்சி காரணமாக மாம்பழ உற்பத்திவெகுவாகப் ...


## மலேசியாவில் துங்கு மீண்டும் ஆட்சி நடத்துவார்

கோலாலம்பூர், மே 11

மலேசியாவில் ஆளும் கட்சியான துங்கு, அப்துல் ரகுமானின் கூட்டணிக்கட்சி ஆட்சிபீடத்துககு மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் கடந்த முறையை விடக் குறைந்த தொகுதிகளே அதற்குக் கிடைத்துள்ளது.

இதுவரை வெளியான முடிவுகளின்படி கூட்டணிக்கட்சிக்கு 76 தொகுதிகளில் வெற்றி கிடைத்துள்ளன. கடந்த ஆட்சிமன்றத்தில் கூட்டணிக்கு 122 அங்கத்தவர்கள் இருந்தார்கள். எதிர்க்கட்சிகளுக்கு இம்முறை 36 இடங்களில் வெற்றி கிடைத்துள்ளது.

சாபா, சரவாக் பிரதேசத்தில நடைபெற்ற தேர்தல் விபரங்கள் வெளியாவதற்கு இன்னும் சில தினங்கள் பிடிக்கும்.



(விபரம் 3-ம்பக்கம் பார்க்க)

## களவாடிய பணத்தில் கைக்கடிகாரம் வாங்கினாராம்

### சந்தேகநபர் பெருளுடன் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

இருநூறு ரூபாய் பணத்தைக் களவாடிய ஒருவர் அந்தப் பணத்துக்கு ஒரு புதுக் கைக்கடிகாரத்தை வாங்கினாராம். இது சம்பந்தமாகக் கிடைத்த ஒரு புகாரைத் தொடர்ந்து சந்தேகநபரையும் மணிக்கூட்டையும் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கரையூர் பொலிஸ் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கொழும்புத் துறையைச் சேர்ந்த என். சிவகுநாரன் என்பவர் கரையூர் பொலிஸ் நிலையத்தில் செய்த புகாரை தொடர்ந்தே தஅதே இடத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் என்பவரை கைக்கடிகாரத்துடன் சேர்த்துப் பொலிசார் கைது செய்தனர்.

பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்.

(கா. நி)

## ஒரே சின்னத்தின்மீதே தேர்தலில் போட்டியிடுவர்

### கூட்டணியினர் முடிவு

கொழும்பு, ஞாயிறு

ஒரே சின்னத்தின் மீதே அடுத்த தேர்தலில் தங்கள் அபேட்சகர்களை நிறுத்துவதென்று எதிர்க்கட்சிக் கூட்டணி ... இணைந்த எதிர்க்கட்சிக் கூட்டணி அபேட்சகர்களின்தேர்தல் சின்னம் 'கை' அடையாளமாகவே இருக்கும். சென்ற தேர்தலின்போது ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று முதல் உரும்பராய் ஊரெழுவுக்கு மின்சாரம்

உரும்பராய், திங்கள் உரும்பராய்-ஊரெழு பட்டினசபை மின்சாரவிநியோகம் இன்று மாலைமுதல் ஆரம்பமாகவிருக்கிறது.

இந்த விநியோகத்தைஉள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு.ஜோசப் ஆரம்பித்து வைப்பார். முதலில் உரும்பராய்க்கும் பின்னர் ஊரெழுவுக்கும் மின்சார விநியோகம் நடைபெறும்.

இதனை முன்னிட்டு உரும்பராய்-ஊரெழு பட்டின சபை அறுவலகத்தில் தலைவர் திரு.ச.பத்மராஜா தலைமையில் ஒரு விருந்து நடைபெறவிருக்கிறது.

வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாண நகர எல்லைக்குள் தினமும் விபத்துக்கள் நடப்பது பற்றியும். இதில் கூடுதலானவை இ. போ. ச. பஸ் விபத்துக்களாகவே இருப்பது பற்றிக் குறிப்பிட்டு அவரிடம் அபிப்பிராயம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்குள்ள வீதிகள்மிகக் குறுகியனவாகவும், அகலம் குறைந்தனவாகவும் இருப்பதால் 'டபிள்டெக்கர் பஸ்களை இங்கு சேவைக்கு விட வீதியில் செல்லும்போது, அதனால் வீதி முழுவதுமே மறைக்கப்படுகின்றதென்றும், இதனால் அந்த பஸ்ஸுக்[illegible] பின்னால் என்ன வரு[illegible]றதென்பதைக் கண்டுகொள்ள முடியாமல், வீதியைக் கடப்பவர்கள் அங்கு வேறு வாகனங்களுடன் மோதுவதாகவும் இதுவே விபத்துக்கு முக்கியமான ஒரு காரணம் என்றும் தெரிவித்தார்.

மதுபோதையில் பஸ்களைச் செலுத்துவது, நகர எல்லைக்குள்ளேயே கூடிய வேகத்தில் செல்வது, அதிக பிரயாணிகளை பஸ்களில்ஏற்றுவது, பாதசாரிகள் வீதி நடைமுறைகளைச் சரியாக அனுசரித்து நடக்காததும்கூட விபத்துக்கள் அதிகரிக்கக்

[illegible]லிஸ் சுப்பிரிண்டெண்ட், [illegible] களில் மிதிபலகைப் பிரயாணத்தை முற்றாகத்தடுக்க இன்று முதல் பொலிஸார் பலத்த கண்காணி[illegible] செலுத்துவர் என்றும், [illegible]தி பலகையில் பிரயாணிக்கை ஏற்றும் கண்டக்டர்கள் மீதும், மிதிபலகைப் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் மீது சட்டநடவடிக்கைமேற்கொள்ளப்படலாம் என்றும் சொன்னார்.

விதி ஒழுங்கு முறைகளை பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் நடைமுறையில் காட்ட அடுத்த மாதம் முதல் வாரம் யாழ்ப்பாணம் ஸ்ரேடியம் மைதானத்தில் கண்காட்சி ஒன்றும் பொலிஸாரால் நடாத்தப்படவிருக்கின்றது. (கா. நி.)

தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் இரண்டரை லட்சம் உதான் மாம்பழம் உற்பத்தியாவதுண்டென்றும் இம் முறை நிலவிய கடும் வரட்சி காரணமாக மாம்பழ உற்பத்திவெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள தென்றும் விவசாய இலாகா அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

### 6 பேர் பலி

கலிபோர்ணியா, மே. 11 லாஸ் ஏன்ஜல்ஸில் நடைபெற்ற விமான விபத்தில் 6 பேர் மாண்டனர். விமானம் தரையிறங்க முயன்றபோதே இவ்விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

### கூட்டணியினர் முடிவு

கொழும்பு, ஞாயிறு ஒரே சின்னத்தின் மீதே அடுத்த தேர்தலில் தங்கள் அபேட்சகர்களை நிறுத்துவதென்று எதிர்க்கட்சிக் கூட்டணிக்கட்சிகள் தீர்மானித்திருக்கின்றன. லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோசார்பு), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்த எதிர்க்கட்சிக் கூட்டணி அபேட்சகர்களின்தேர்தல் சின்னம் 'கை' அடையாளமாகவே இருக்கும். சென்ற தேர்தலின்போது சுதந்திரக்கட்சியின் சின்னம் கை யாகவும் சமசமாஜக் கட்சியின் சின்னம் திறப்பாகவும் கம்யூனிஸ்ட்கட்சியின் சின்னம் நட்சத்திரமாகவும் இருந்தது.

# தொழில்நுட்ப மாணவர்கள் தொடர்ந்து பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஞாயிறு கட்டுபெத்தையிலுள்ள இலங்கை உயர் தொழில் நுட்பவியற் கலாசாலை மாணவர்கள் தொடர்ந்து தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்துவருகிறார்கள். வெள்ளிக்கிழமையன்று காலையில் நடைபெற்ற மாணவர்களின் கூட்டத்தில் பகிஷ்கரிப்பதென்ற முடிவு எடுக்கப்பட்டது. மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு கோரிக்கைகளையும் பரிசிலனை செய்யவும் பேச்சு நடாத்தவும் கலாசாலை நிர்வாகம் மறுத்துவிட்டதாம்.

மாணவர்கள் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளாவன:

■ மூடப்பட்ட கலாசாலை விடுதி உடனடியாக மாணவர்களுக்குத் திறந்துவிடப்படவேண்டும்.

■ விடுதி நிர்வாகம் பற்றி ஒரு தலைபட்சமற்ற விசாரணை நடைபெறவேண்டும்.

■ விடுதியிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள் மீண்டும் சேர்க்கப்படவேண்டும்.

■ விடுதி திறக்கப்படும் வரை கலாசாலை மூடப்படவேண்டும்.

வெள்ளிக்கிழமையன்று காலையில் இக்கோரிக்கைகளைச் சமர்ப்பித்த மாணவர்கள், கலாசாலைக்கட்டடத்தில் திரண்டு நின்றார்கள். உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ற் திரு. சண்முகம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினால் இந்த மாணவர்கள் கலாசாலைக்கு வெளியே விரட்டப்பட்டார்கள். வெளியேறிய சுமார் ஆயிரம் மாணவர்கள் வீதியோரத்தில் நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

நமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதென்றும் முடிவெடுத்தனர்.

விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டது சம்பந்தமாகக் கூறப்படுவதாவது:-

உணவு திருப்திகரமானதாக இல்லையென்று மாணவர்கள் புகார் செய்திருந்தார்கள். இதற்கிடையில், விடுதி நிர்வாகியொருவரால் விடுதியிலிருந்து மீன் கடத்தப்பட்டதைச் சில மாணவர்கள் அவதானித்ததாகவும், இதுபற்றி முறைப்பாடுசெய்ததாகவும் சொல்லப்படுகிறது. விடுதியில் தொடர்ந்து நடைபெற்று வந்த கிளர்ச்சிகளையும், முறைப்பாடுகளையும் தொடர்ந்து, இந்த முறைப்பாடுகளைச் செய்த சில மாணவர்கள் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டார்களாம். இம்மாணவர்கள் தமது அரிசிப்பங்கீட்டுப்புத்தகங்களை விடுதியிலிருந்து மீட்டபோது அவற்றில் துணிக் கூப்பன்களும், விடுமுறைக் காலத்து அரிசிக் கூப்பன்களும் தவறுவது கண்டுபிடிக்கப்பட்டதாம். உணவுக் கட்டுப்பாட்டதிகாரிகள் விடுதிக்குச் சென்று பரிசோதனை நடத்தினார்களாம். விடுதி நிர்வாகத்தின் மேல் அதிருப்தியும் ஆத்திரமும்கொண்ட மாணவர்கள் 6-ம் திகதியன்று நள்ளிரவுவரை விடுதியில் பெரும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினார்கள். மின்சார இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டன.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து, மாணவர்கள் யாவரையும் விடுதியைவிட்டு இரு மணி நேரத்தில் வெளியேறுமாறு மறுநாட்காலையில்கலாசாலை நிர்வாகத்தால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இதற்குப் பணிய மறுத்த மாணவர்களைக் கல்கிசையிலிருந்து அழைக்கப்பட்ட பொலிஸ்படை வெளியேற்றியது. கல்வியமைச்சரையும் மாணவர்கள் சந்திக்கவுள்ளனர்.

## பழிவாங்கினால் விடாது போராடுவார்களாம்

### மாணவர் சங்கம் முடிவு

மாணவர்கள் எவராவது கலாசாலையிலிருந்து நீக்கப்படும் பட்சத்தில், பகிஷ்கார இயக்கத்தை விடாது நடத்துவதெனவும், மேற்கொண்டு நடவடிக்கை பற்றிப்பின்னர் ஆராய்வதெனவும் மாணவர் கழகத்தில் ஏகமனதாகத்தீர்மானிக்கப்பட்டது.

மாணவர்களால் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கோரிக்கைகளுக்கு நிர்வாகம் இணங்கினாலும், மாணவர்களைப் பழிவாங்கும் புதிய நடவடிக்கையில் அது ஈடுபட்டால், போராட்டத்தை தொடர்ந்து நடாத்த வேண்டுமென மாணவர்கள் ஒருமனதாக முடிவு செய்துள்ளனர் எனத்தெரிகிறது.

இதற்கிடையில் ஆரும் தேதியன்று விடுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது துண்டாக்கப் பட்ட மின்சார இணைப்புக்கள் யாவும் திருத்தப்பட்டதாகவும், விடுதிசாலை மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிட்டதாயும் அறியப்படுகின்றது.

கலாசாலையில் பலத்த பொலிஸ்பாதுகாப்புபோடப்பட்டுள்ளது.

# 'மாணவன் மரணத்திற்குகாரணம் பஸ் சாரதியின் கவலையீனமே'

## மரணவிசாரணை அதிகாரி கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள் "ஒரு சாரதி பஸ்ஸைச் செலுத்திக் கொண்டிருக்கும் போது பஸ்ஸுக்குள்ளும், வெளியிலும் பல உயிர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் கடமையிலிருக்கின்றேன் என்பதை ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. இதனை மறந்து விடுவதால்தான் இப்படியான விபத்துக்கள் அடிக்கடிநடைபெறுகின்றன. இந்த பஸ்ஸைச் செலுத்திய சாரதி கவலையீனமாகவும், வேகமாகவும் பஸ்ஸைச் செலுத்திச் சென்றதால் தான் இந்த விபத்து நிகழவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் ஒரு மாணவனின் உயிர் பலியானது வருந்தத்தக்கதாகும். இது சாரதியின்கவலையீனத்தால் நடந்தது என்று நான் குறிப்பிடவே விரும்புகின்றேன்"

மாணவன்ஒருவனை மோதி மரணம் சம்பவித்தது சம்பந்தமாக நடைபெற்ற மரணவிசாரணையின் முடிவிலேயே விசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு, எஸ். கனகரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

மரணமான தர்மலிங்கம் திருப்பதிநாதன் (வயது 18) கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் மேல் வகுப்பில் கல்விகற்றுவந்தார். இவ்விபத்து நேற்றுமுன்தினம் மாலை 5-10 மணியளவில் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்றது.

கல்லூரி முடிவடைந்த பின்னர் விளையாடிவிட்டு குறிப்பிட்ட மாணவன் சைக்கிளில் இருபாலை நோக்கிச் செல்கையில் இவ்விபத்து நடைபெற்றதாகமரணவிசாரணையில் சாட்சியமளித்த மற்றொரு மாணவனை ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

டாக்டர் ஞானசுந்தரம் பிரேதபரிசோதனை செய்தார். சாரதியின் கவலையீனத்தைக் கண்டித்த மரணவிசாரணை அதிகாரி, குறிப்பிட்ட யாழ்ப்பாணம்-பருத்தித்துறை இ. போ. ச. பஸ்ஸின் சாரதியான பச்சைமுத்து சுப்பிரமணியத்தை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து இம் மாதம் 19-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார், (கா. நி.)

# 'கூடிய பஸ்களை விரைவில் அனுப்புகிறேன்'

## உதவி அமைச்சர் வாக்குறுதி

யாழ்ப்பாணம், திங்கள் கடந்த இரு திங்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து இங்குள்ள பல பஸ் நிலையங்களுக்கும் விஜயம் செய்த பின்னர் நேற்று நண்பகல் இங்கிருந்துகொழும்பு திரும்பிய தேசியசேவை உதவி அமைச்சர் திரு.வெரகெதர யாழ்ப்பாணம் பஸ் சேவை அபிவிருத்தியடைய கூடிய பஸ்களை விரைவில் அனுப்பிவைப்பதாக வாக்குறுதி அளித்து விட்டுச் சென்றார்.

திரு. வெரகெதர நேற்று கோண்டாவில் பருத்தித்துறை பஸ் டிப்போக்களுக்கும், யாழ்ப்பாணம், சுன்னாகம், கீரிமலை பஸ் தரிப்பு நிலையங்களுக்கும் நேரில் சென்று நிலைமையைப் பார்வையிட்டார்.

உதவி அமைச்சர் திரு. வெரகெதரவின் வட பிராந்திய இ. போ. ச. அதிகாரி திரு. வேலுப்பிள்ளையும் கூடச் சென்று நிலைமைகளை நேரில் விளக்கினார்.

நேற்று நண்பகல் 2-20 மணிக்கு புகையிரதத்தில கொழும்புதிரும்பிய திரு. வெரகெதர கூடுதலா பஸ்களை இங்கு அனுப்பிவைப்பதாக வாக்குறுதி அளித்துச் சென்றார். (கா. நி)

# சம்பளக்கமிஷன் அறிக்கை பட்ஜட்டில் சேர்க்கப்படும்

## யூனியன் பிரமுகர்களிடம் பிரதமர் தெரிவித்த தகவல்

கொழும்பு, ஞாயிறு சம்பளக்கமிஷனின் இடைகால அறிக்கை புதிய வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் என்று பிரதமர் திரு. டட்லிசேனநாயகா இன்று தம்மைச் சந்தித்த அரசாங்க சேவைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார். இதை தூதுகோஷ்டியினர் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

இப்பொழுது நிதி நிலைமை அபிவிருத்தியடைந்திருப்பதாகவும் அரசாங்க ஊழியரின் குறைகளை நீக்க முடியுமென்றும் இதனால் சம்பளக் கமிஷனின் இடைக்கால அறிக்கை கிடைத்ததும் அதைஇம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கத் தாம் தீர்மானித்திருப்பதாகவும் பிரதமர் சொன்னார். சம்பளக்கமிஷனின் இடைக்கால அறிக்கை மே மாத முடிவுக்குள் கிடைத்துவிடுமென எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் கூறினார்.

# லைசென்சுக்கு பணம் கிடைக்காததால் 'தற்கொலை

யாழ்ப்பாணம், திங்கள் லொறி லைசென்ஸ் எடுப்பதற்கு தாயிடம் பணம் கேட்ட மைந்தன், தாய் பணம்கொடுக்கமறுத்ததால் மனமுடைந்து நச்சுத்திராவகம் அருந்தி மரணமானார்.

இந்தப் பரிதாப சம்பவம் ஊரெழுப் பகுதியில் நேற்றிரவு நடைபெற்றது.

மரணமான அப்புத்துரை பாலசூரி (22வயது) என்ற வாலிபர் லொறி லைசென்ஸ் எடுப்பதற்காக தாயிடம் 500 ரூபா காசுகேட்டதாகவும் தாய் கொடுக்க மறுத்ததால் மனமுடைந்து நச்சுத்திராவகம் அருந்தி மரணமானதாகவும் விசாரணையில் காலஞ்சென்றவரின் தந்தை தெரிவித்தார்.

மரணவிசாரணை அதிகாரி திரு.என்.இராசநாயகம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (கா.நி.)

# பாரதத்துக்கு சீனா 24 மணி நேர எச்சரிக்கை

பீகிங்,மே 11 பாரதத்துக்கு சீனா24மணி நேர எச்சரிக்கையொன்றை இன்று விடுத்தது.

சிக்கிம்எல்லையைத்தாண்டி சீனப் பிரதேசத்துக்குள்இந்தியப் படைகள் அத்துமீறிப் பிரவேசித்ததாக சீனா குற்றஞ் சாட்டியுள்ளது.

சீன எல்லைக்குள் மூன்று தடவை இவ்வாறு இந்திய படைகள் அத்துமீறிப் பிரவேசித்துள்ளதாக சீனாதனது குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளது. இன்னும் 24மணி நேரத்திற்குள் இந்தியபடைகள் சீன எல்லையிலிருந்து விலகி பின்செல்லாவிட்டால் தனது தற்பாதுகாப்பு தாக்குதலை ஆரம்பிக்க வேண்டியிருக்கும் என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

விமான அடுத்துமீறல்களை பாரதம் செய்துள்ளதாகவும் சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

ஸ்ருடியோ வேலை பழக ஆர்வமுள்ள 16 வயதுக்கு உட்பட்ட பையன்கள் தேவை. பாதுகாவலருடன் நேரில் வரவும். சித்ராலயா, 18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1111

அரிசி மில்லில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர் தேவை. திறமைக்கேற்ற சம்பளம், ''போனர்ஸ்'' வழங்கப்படும். தொழிலாளர் சேமநிதியும் செலுத்தப்படும். மாப்பியன் மில், மானிப்பாய். 1106

மலைநாட்டிலுள்ள டாக்டருக்கு அனுபவமும் நல்லொழுக்கமும் உடைய மோட்டார்க் கார்ச்சாரதி தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1108 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1108

### விற்பனைக்கு

15 ''ஹோஸ்பவர்'' சக்தியுள்ள பார்ட்டுபிஸ்டன் சிலேஸ் பீற் றஸ்டன் ஒயில் என்ஜின் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. மாப்பியன் மில், சுதுமலை. 1107

பெர்கூசன் ராக்றர் 25 ஸ்ரீ வரிசையில் கலப்பையுடன், வான்காட் பிரயாணிகள் வான் 3 ஸ்ரீ வரிசையில் விற்பனைக்கு உண்டு. வி. பஞ்சலிங்கம், பாலாவோடை, காரைநகர். 1014

## பரிசளிப்பு விழா

உடுப்பிட்டி, ஞாயிறு

வதிரி வேவரையாளி இந்துக்கல்லூரியின் வருடாந்தப் பரிசழிப்பு விழா வரும் 14-ம் திகதி புதன்கிழமை கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் நடைபெறும். யாழ்நகர மேயர் திரு. எஸ். எஸ். நாகராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுவார். திருமதி நாகராசா பரிசில்கள் வழங்குவார். கலை, கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கேள்வி விளம்பரம்

### பட்டணசபை, பண்டத்தரிப்பு

பின் வரும் ரேட்டு வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் 1-6-69 முற்பகல் 10 மணி வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுப்பணமாக ரூபா 50-00ம் கேள்விப்பத்திரக்கிரயமாக ரூபா 5-00ம் செலுத்தியதன் பேரில் 30-5-69 பிற்பகல் 3-00 மணி வரை இக்கந்தோரில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்படும். அனுபவம் வாய்ந்த ஒப்பந்தகாரர் ரூபா 25-00 செலுத்தி இச்சபையில் பதிந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் பட்டணசபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

1. முல்லையடி தங்கடவாசல் ஒழுங்கை.

இ. செல்வரத்தினம்,
தலைவர்,
பட்டணசபை,
பண்டத்தரிப்பு.

பட்டணசபை
காரியாலயம்,
பண்டத்தரிப்பு,
திகதி:-10-5-69. 1570

MANOHARA
JAFFNA
Daily
2-30 6-30 & 9-30 P.M.
Pre-Poya Poya 4 Shows
Asah Parekh, Manoj Kumar
in
DO BADAN
(Eastman color)

இனுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி

## கேள்வி விளம்பரம்

### கருநாவல்பற்று தெற்கு கிராமசபை

ஒலுமடு வயல் ரேட்டு வேலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்பத்திரங்களை அக்கிராசனரிடமிருந்து 24-5-69க்கு முன் பத்திரப்பணமாக ரூபா 5/-ம், கேள்விப் பிணையாக ரூபா 100/-ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். (பத்திரப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது) விண்ணப்பங்கள் யாவும் அக்கிராசனருக்கு 25-5-69 காலை 10 மணிக்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் விண்ணப்பத்தின் ஒரு பிரதி வவுனியா உ. ஆ. உ. ஆணையாளருக்கும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும். விபரங்கள் கிராமசபை அலுவலகத்திலும், உ. ஆ. உ. ஆணையாளர் அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில அறிந்துகொள்ளலாம்.

வே. கந்தசாமி ஜே. பி.
தலைவர், கிராமசபை,
ஒலுமடு, மாங்குளம்.
1572

## வட இலங்கைச் சங்கீத சபை யாழ்ப்பாணம்

### சங்கீதப் பரீட்சைகள் 1969

இவ்வாண்டுச் சங்கீதப் பரீட்சைகளின் சாஸ்திரப் பரீட்சை வருகிற ஆடி மாதம் 27-7-69 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், கொழும்பு, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடைபெறும்.

விண்ணப்பங்கள் 10-6-69 வரை ஏற்றுக்கொள்ளப்பெறும். பிந்திய விண்ணப்பங்கள் மேலதிக கட்டணம் ரூபா 5/- உடன் 20-6-69 வரை ஏற்றுக்கொள்ளப்பெறும்.

விண்ணப்பப் பத்திரங்கள் மற்றும் விபரங்களுக்கு தலைவர், வடஇலங்கைச் சங்கீதசபை கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

S. தணிகாசலம்,
தலைவர்.

கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
7-5-69 1573

### தற்காலிக வேலை மேற்பார்வையாளர்

பதவி — மத்திய சங்கை

## நெல்லியடிப் பட்டினம் கேள்விவிளம்பரம்

1969-ம் ஆண்டு வைகாசி மாதம் 25-ந் திகதி முற்பகல் 10-30 மணி வரைக்கும், மேற்படி பட்டின விசேஷ ஆணையாளரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் ஒவ்வொன்றிற்கும், கேள்விப் பிணைப்பணம் ரூபா 50/-ம், பத்திரப்பணம் ரூபா 5/-ம் செலுத்தியதின் பேரில் 24-5-1969 பிற்பகல் 1-30 மணிவரை, விசேஷ ஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரத்தில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் யாவும் நெல்லியடிப்பட்டின விசேஷ ஆணையாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

அ. அ. ஜோசப்,
விசேஷ ஆணையாளர்.

### வேலையின் விபரம்

1. இராசசிங்கம் ரேட்டுத் திருத்தி அமைத்தல். (அரசாங்க நன்கொடை)
2. பொன். கந்தையா ரேட்டுத் திருத்தம். 2-ம் வட்டாரம்.

விசேஷஆணையாளர் அலுவலகம்
நெல்லியடிப் பட்டினம்,
கரவெட்டி, 10-5-1969.
1569

## விவசாயக்கழக நிர்வாகிகள்

கோப்பாய். ஞாயிறு

கோப்பாய் அம்பாள் இளைஞர் விவசாயக்கழகபுதுவருட நிர்வாகிகள் தெரிவு திரு. ரி. எஸ். அரசபிள்ளை தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். ரி. அரசபிள்ளை, உபதலைவர்கள்: திருவாளர்கள் கே. தர்மலிங்கம், செல்வி ஆர். மகேஸ்வரி, செயலாளர் திரு. கே. சிவலிங்கம். உபசெயலாளர்கள்: திரு, வி. எஸ், செல்வரத்தினம், ரி. மல்லிகாதேவி. தனாதிகாரி: திரு. [illegible]ஸ். மகாலிங்கம்.

எ[illegible]மர் அடங்கிய போஷகர் குழுவொன்றும் ஆறு பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்[illegible].

மென்பந்து கிரிக்கெட் மோதல்

## ஜனசக்தி விளையாட்டுகழகம் 4 விக்கட்டுகளால் வெற்றி

உடுப்பிட்டி, ஞாயிறு

கரணவாய் தெற்கு ஜனசக்தி விளையாட்டுக்கழகத்திற்கும் பொலிகண்டி யுனைட்டெட் கழகத்திற்குமிடையே கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் மென்பந்து கிரிக்கெட் மோதல் நடைபெற்றது.

முதலாவது இன்னிங்ஸில் யுனைட்டெட் வீரர்கள் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 64 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் ரவீந்திரன் 13 ஓட்டங்களும், நந்தகுமாரன் 16 ஓட்டங்களும் பெற்றனர். பரமநாதன், தவராசா முதலியார் ஜனசக்தி சார்பில் திறமையாக விளையாடினர் ஜனசக்தி கோஷ்டியினர் தமது முதலாவது இன்னிங்ஸில் மொத்தம் 53 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதில் முருகானந்தம் 21 ஓட்டங்களைப் பெற்றுர். பொலிகண்டி யுனைட்டெட் கோஷ்டியைச் சேர்ந்த நந்தகுமாரன் பந்துவீச்சு அபாரம். யுனைட்டெட் கோஷ்டி தமது இரண்டாவது இன்னிங்ஸில் 47 ஓட்டங்களைப் பெற்றது.

ஜனசக்தி வீரர்கள் இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றனர். பஞ்சநாதன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களுடன் ''சபாஷ்'' பெற்றுக்கொண்டார். ஆட்ட இறுதியில் கரணவாய்தெற்கு ஜனசக்தி விளையாட்டுக்கழகம் 4 விக்கெட்டுக்களால் வெற்றி ஈட்டியது.

## நள்ளிரவில் வீட்டுக்குள் புகுந்த இருவருக்கு கத்தி வெட்டு

உருத்திரபுரம், ஞாயிறு

தனித்திருந்த இளம்பெண்ணின் வீட்டுக்கு நள்ளிரவு நேரம் சென்ற இருவர் கத்தி வெட்டுக்கு இலக்கானுர்களாம். இந்தச் சம்பவம் உருத்திரபுரத்திலுள்ள சிவநகர் என்ற இடத்தில் நடைபெற்றது.

இந்தக் கத்திவெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த தனபாலசிங்கம், அரசலிங்கம் ஆகிய இருவரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிவநகரைச் சேர்ந்த சின்னத்துரை என்பவர் இது சம்பந்தமாகக் கிளிநொச்சிப் பொலிஸில் செய்த புகாரைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் இருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இரண்டாவதுசந்தேகநபர் இன்று காலை கைதுசெய்யப்பட்டார். கிளிநொச்சி குற்றத்தடுப்புப் பொலிஸ்பகுதி சார்ஜண்ட் திரு. செல்லையாபுலன் விசாரணை நடாத்தி வருகின்றுர்.

## தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் பொதுச்செயலாளரும், தென்மராட்சிமேற்கு திருஞானசம்பந்தர் சபையின் இணைசெயலாளருமான திரு. ஆ. கந்தையா அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைக்குழு உறுப்பினராக அண்மையில் நடைபெற்ற ஆண்டுவிழாவில் தெரிவுசெய்யப்ப[illegible]ள்ளார்.

## மறைவுக்கு அனுதாபம்

உடுப்பிட்டி, ஞாயிறு

[illegible] சென்ற [illegible] ஜனதிபதி டாக்டர்சா[illegible]ர்

## வரவேற்பு

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் கிராமசபையின் உபதலைவர் திரு. கே. [illegible]ர்மலிங்கத்துக்கு வரவேற்புபசார விழாவொன்று கோப்பாய் வடக்கு அம்பாள் விவசாயக் கழகத்தாரால் நடாத்தப்பட்டது. இவ்விழாவில் பலர் பாராட்டுரை வழங்கினுர்கள்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## அகில இலங்கை மெய் வல்லுனர் போட்டி

### யாழ். நகரில் 14, 15-ல் நடைபெறும்

அளவெட்டி, ஞாயிறு

அகில இலங்கை ரீதியில் மாபெரும் மெய்வல்லுனர் போட்டி ஒன்று யாழ்நகரில் இம்மாதம் 14, 15-ந் திகதிகளில். நடைபெறவிருக்கிறது.

அகில இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சங்கத்தின் ஆதரவில் நிகழும் இப்போட்டியில் இலங்கையில் உள்ள 70க்கு மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து 365 மாணவர்கள் கலந்துகொள்வர்.

13, 14, 15 வயதுக்கு மூன்று பிரிவாகவே இப்போட்டி நடைபெறும்.

இலங்கையின் மாகாணங்களை 13 பிரிவாகப் பிரித்து நடைபெறவிருக்கும் இப்போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கனகரத்தினம் மகாவித்தியாலயம், சென். ஜோன்ஸ், சென்ரல் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, சென் என்றியல், மானிப்பாய் இந்து, ஸ்கந்தவரோதயா, தெல்லிப்பழை மகாஜனு ஆகியன உட்பட மற்றும் பல பாடசாலைகளும் கலந்துகொள்கின்றன.

மத்திய மாகாணத்தில் இருந்து சென் அந்தனிஸ், கிங்ஸ்ருட் கல்லூரி, டிரேட்டிக்கல்லூரி, பேராதனை மகாவித்தியாலயமும் பிறவும்

(4-ம் பக்கம் பார்க்க)

பிரமாண்டமான
ஏல விற்பனை
மே 16-ந் திகதி வெள்ளிக்கிழமை
காலை 10-30 மணிக்கு
பிரமாண்டமான ஏல விற்பனை
யாழ்ப்பாணம்
சுண்டிக்குளியில்
17 கட்டிடக் காணிகள் 17



மாநகரசபைஎல்லைக்குள் கொழும்புத்துறை ரோட்டுக்கு சிறிது அப்பால் ஆனுல் ஓரமாக
O சுண்டிக்குளி மகளிர்கல்லூரி, O சென்ஜோன்ஸ்கல்லூரி பாடசாலைகளிலிருந்து 1/4 மைல் தூரத்தில்
O பஜார் O கச்சேரி O கோவில்கள் O தேவாலயங்கள் முதலியவற்றிற்கு மிக அண்மையில்,
மின்சார வசதியும்
தண்ணீர் விநியோக சேவையும் உண்டு. நல்ல உறுதி உறுதியும், படமும், இந்தக் கந்தோரின் புரக்டர்களும், நொத்தாரிசுகளுமான மெஸர்ஸ் கொடிகார & அபெயநாயக்கா அவர்களிடம் உண்டு.
டக்ளஸ் சி. குரேரா, ஏலதாரர்.
புரொப்பட்டி சேல்ஸ் லிமிட்டெட்
O ஏலதாரர்கள் O தரகர்கள் O கட்டிடக்காரர்கள்
279, யூனியன் பிளேஸ் :: :: கொழும்பு.
போன்: 25155 1562

இன்று முதல் 16-5-69 வரை
வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
எம். ஜி. ஆர்.
அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி
(புத்தம் புதிய கொப்பி)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

களைகள்
எல்லாவற்றையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(புத்தம் புதிய கொப்பி)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் ★ ஜெயலலிதா
நடித்த
**கலாட்டா கல்யாணம்**

ராணி
[யாழ்ப்பாணம்)
[தினசரி 3காட்சிகள்]
★ ஜெய்சங்கர்
★ விஜயகுமாரி
நடித்த
**ஜீவனம்சம்**

**இப்பொழுது திரையிடப்படுகிறது!**
**யாழ். வெலிங்டன் திரையில்**
தினசரி பி. ப. 2-30, மாலை 6-00 இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம் போயா தினம்,
விடுமுறை நாட்களில் காலை 10-00 மணிக்கு



பத்மஸ்ரீ — குணசித்திர நடிகர்
பானுமதி — எஸ். வி. ரங்கராவ்
ஏ. வி. எம். ராஜன் — பண்டரிபாய்
முத்துராமன் — பாரதி — நாகேஷ்
நடிக்கும்
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
**பூவும் பொட்டும்**
டைரக்ஷன்
தாதாமிராசி

இங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ்
நடித்த
**அதே கண்கள்**

7-5-69 1573

## தற்காலிக வேலை மேற்பார்வையாளர் பதவி — மத்திய சந்தை நிர்மாணித்தல் யாழ்ப்பாணம்

மேற்குறிப்பிட்ட பதவிக்கு யாழ். மாநகரசபை ஆணையாளரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(2) விண்ணப்பதாரர்கள் பௌதிகம் அல்லது கணிதம் ஒரு பாடமாக ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சை சித்தியடைந்து இலங்கையிலுள்ள தொழில்நுட்ப நிறுவனமொன்றில் 3 வருடப் பயிற்சிபெற்று கட்டிட நிர்மாண வேலையில் சித்திபெற்றிருக்க வேண்டும். ஸ்திரமான சிமெந்து வேலைகள் கட்டிட வேலைகள் ஆகியவற்றில் 2 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(3) நியமனம் தற்காலிகமானது. தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஒருமாத அறிவித்தலில் சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

(4) எல்லாப்படிகளும் உட்பட மாதம் ஒன்றுக்கு ரூபா 250/- வேதனம் வழங்கப்படும். வேறுபடிகள் கொடுக்கப்படமாட்டா.

(5) தகைமைகள், அனுபவம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு தராதரப் பத்திரப் பிரதிகளுடன் விண்ணப்பத்தை இணைத்து மாநகர சபை ஆணையாளர். யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு 28-5-69-ம் தேதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்கவேண்டும்-

ஏ. ரி. சுந்தரம்
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபைக்காரியாலயம்.
நகரசபை. யாழ்ப்பாணம்.
மே 9, 1969 1574

ராஜா 119வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
**ஒளிவிளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

**REGAL** at JAFFNA
Daily 4-45. 7 &9-45 p.m.
Pre-Poya, Poya 4 Shows
Michael Caine, Sue Lloyd
in
**The Ipeross File**
(Adults)

...பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

## இன்றைய பலன்

சௌமிய வருடம்
12-5-69
திங்கட்கிழமை
சித்திரை 30-ந் திகதி

திதி-ஏகாதசி பகல்1-03 மேல் துவாதசி.

நட்சத்திரம்- உத்திரட்டாதி இரவு 1-01 மேல் ரேவதி.

ராகுகாலம்- 7-24—8-54.

சுபநேரம்- 11-54—01-24.

இன்று பிறந்தவர்களுக்கு- நீர்த்தொழில் புரிவோர்க்கு நிம்மதி தரும் ஆண்டாகும். குருதொழில் புரிவோர்க்கு குமைச்சல் அதிகம். குற்றவாளிகளுக்கு மன்னிப்பு உண்டு. குடும்பக்கவலை உறவாடும் நிலை. வாகன சுகம், வரவிலும் திருப்தி சிற்பத் தொழில் சிறப்புத் தரும் ஆண்டாகும்.

மேஷம்- உத்தியோக விருத்தி ஊக்கமிகுதி.
ரிஷபம்- காதல் களத்தில் மோதலைத்தவிர்.
மிதுனம்- பெற்ருேர் உதவி பெருமையும் சேரும்.
கடகம்- நல்லவர் வரவு நகைச்சுவை உண்டு.
சிம்மம்- இளமை நினைவுகள் ஏக்கத்தின் சாயல்.
கன்னி- சதிபதி மகிழ்ச்சி வெகுமதி உண்டு.
துலாம்- வாகன நஷ்டம் வரவு தடைப்படும்.
விருச்சிகம்- உற்ருர் வருகை உவகை மிகுதி.
தனுசு- தடுமாற்றம் வேண்டாம் தன்தொழில் விருத்தி.
மகரம்- தியாக உள்ளம் திறமையும் சேரும்.
கும்பம்- பகைவர்கண்ணோட்டம் பார்த்துநட.
மீனம்-ஊக்கமின்மை உயர்வில் தாமதம்.

-சோதிடக் கலாநிதி-
திருமலைவேலுப்பிள்ளை

## ...அனுதாபம்

உடுப்பிட்டி, ஞாயிறு காலஞ்சென்ற [illegible]த ஜனாதிபதி டாக்டர்சா[illegible]ர் குசெயின் மறைவுக்குஅனுதாபம் தெரிவித்து அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தினரால் மனோகரா சனசமூக நிலையத்தில் அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டது.

திரு. சிவபாதவிருதையர் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது, திரு.இ. விஜயரத்தினம் பேசுகையில் ''இளம்வயதிலிருந்தே கல்வியில் நாட்டம் கொண்டதன்பயனாக அலிகார் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பலகாலம் பணியாற்றிக் கல்வித்துறையை முன்னேற்றினார். முன்னைய பாரத ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணனின் வழியில்ஜனாதிபதியாகி பாரதநாட்டிற்கு அரும் பெரும் தொண்டாற்றித் தனது இறுதிக் காலம் வரையும் கடமையாற்ருமல் திடீரென இறந்தது பாரத நாட்டிற்கு ஓர்பெரிய இழப்பாகும்,'' என்று கூறினார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 12—5—69**

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 படப்பாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன் 61 மீ.

மாலை 4-30 செய்திச்சுருக்கம், 4-35 கல்விநிகழ்ச்சி, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர் பாடல், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வாத்தியஇசை, 7-35 குங்குமம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 கதாப்பிரசங்கம், 10-30 செய்திச்சுருக்கம்.

**எல்லாவற்றையும் ஒழித்து விளைச்சலைப் பெருக்க**

புதிய சீர்ப்படுத்திய

**ஸ்டாம் எப்-34**




புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34, உங்கள் விளைச்சலைச் சூறை[illegible]யாடும் புறகள், முட்கோரைப் புறகள், அகன்ற இலைக்களைகள் அனை[illegible]த்தையும் தேர்ந்து அழித்து ஒழிப்பதின் மூலம் அமோக நெல் வேளாண்மைக்கு உத்தரவாதமளிக்கிறது.

புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34 இல் 36% டி, பி. ஏ. இடம் பெற்றுள்ளது. இக் களைப்புறகொல்லி தெளிகருவியின் பீச்சு முனைகளில் கட்டி பட்டு அடைத்துக் கொள்வதில்லை. இதனை அடைப்பத் தெளிகருவி மூலமோ மிஸ்ட் புளோவர் மூலமோ தெளிக்க[illegible]. முன்னெப்பொழுதைப் பார்க்கிலும் சிறப்பான வகையில் இது களைகளைக் கட்டுப்படுத்துகிறது.

அதிக நெல பயிரிட்டுக் கூடுதல் இலாபம் சம்பாதிக்க உபயோகியுங்கள் "ஸ்டாம்" எப் - 34.

ஷெல் ரசாயனப் பொருட்கள் — SHELL

ரசாயனப்பொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள்

# சீன - சோவியத் எல்லையில் மீண்டும் காவலர் மோதல்

## இருதரப்பிலும் ஆள் சேதம்

மாஸ்கோ, மே 11

சோவியத்—சீன எல்லையில் மீண்டும் இரு தரப்புக் காவலர்களும் மோதிக்கொண்டிருக்கிருர்கள். பல தடவைகள் நடைபெற்றுள்ள இந்த மோதல்களில் இரு தரப்பிலும் பலத்த ஆள் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. மாஸ்கோவில் வெளியான அதிகாரபூர்வமற்ற செய்திகள் இதைத் தெரிவிக்கின்றன.

சீனுவின் வடமேற்கில் உள்ள சிக்கியாங் பிரதேசத்தில் சோவியத்-சீன எல்லையில் இந்த மோதல் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது ஆனல் அதிகாரபூர்வமாக இதுபற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

குறிப்பிட்ட பகுதியில் பல மோதல்கள் நடைபெற்றுள்ளதாகவும் ஒரு தடவை நடைபெற்ற மோதல் கடந்த மார்ச் மாதம் உசூரி ஆற்றின் மறு கரையில் நடைபெற்ற சண்டையைப் போல மோசமான கட்டத்தை அடைந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன. இந்த மோதல்களில் பலத்த ஆள் சேதமும், ஆயுத சேதமும் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

### மாஸ்கோ வானெலி கண்டனம்

இது இவ்வாறு இருக்க சீன கம்யூனிஸ்ட் கட்சியையும், அதன் தலைவர் மாசே துங்கையும் மாஸ்கோ வானெலி பலமாகத் திட்டியிருக்கின்றது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 9வது காங்கிரஸ் அந்நாட்டு மக்களைக் குருட்டுப் பாதையில் இட்டுச்செல்வதாக அமைந்ததாகவும், மாசே துங்கையும் அவருடைய கும்பல்களையும் பதவியில் தொடர்ந்து வைத்திருப்பதையே இந்தக் காங்கிரஸ் மகாநாடு நோக்கமாகக்கொண்டிருந்தது என்றும் மாஸ்கோ வானெலி குற்றஞ்சாட்டியது. இன்னும் சில காலத்தில் சீன மக்கள் மாசே துங்கைப் பற்றி உணர்ந்து கொள்வார்கள் என்றும் அது தெரிவித்தது.

நாஸிகளை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டத்தின் 24வது வெற்றித் தினம் கொண்டாடப்பட்ட பொழுதும் சீனர்கள் கடுமையாகக் கண்டிக்கப்பட்டனர். நாஸிகளுடன் சீன ஆட்சியாளர்கள் ஒப்பிடப்பட்டனர். சீனர்களைக் கண்டிக்கும் கட்டுரையொன்றைப் பிராவ்டாவும் பிரசுரித்தது.

## கேரள மந்திரிமீது லஞ்சப் புகார் நீதி விசாரணைக்கு ஏற்பாடு

திருவனந்தபுரம், மே 11

கேரள மாநிலமந்திரி சபையில் நிதி அமைச்சரான திரு. பி. கே. குஞ்சு மீதான லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் பற்றி நீதி விசாரணை நடத்துவதற்கு முதலமைச்சர் நம்பூதிரிபாட் முடிவுசெய்திருக்கிருர். விசாரணை நடைபெறும் காலத்தில் அவர் பதவியிலிருப்பது சரியல்ல என்று முதல்வர் திரு. குஞ்சுவுக்கு கடித மூலம் அறிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

## 8 அரபு வீரர் பலி

டெல்அவிவ், மே 11

ஜோர்டான் பள்ளத்தாக்கில் நடைபெற்ற மோதலில் 8 அரபுக் கொமாண்டோக்களும், ஒரு இஸ்ரேலியரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சூயஸ் கால்வாய்க்குக் குறுக்கேயும் நேற்றுத் தொடர்ந்து ஐக்கிய அரபுக் குடியரசுப் படைகளும் இஸ்ரேலியப் படைகளும் மோதிக்கொண்டன.

1967ம் ஆண்டுக்குப் பின்னர் நேற்றுத்தான் நீண்ட நேரம் சூயஸ் கால்வாய்க்குக் குறுக்கே சண்டை நடைபெற்றிருப்பதாகக் கூறப்பட்டது.

## 'கலைஞர்களால் ஒருநாட்டை முன்னேற்ற முடியும்'

### நாடகவிழாவில் சாவகச்சேரி எம். பி.

மட்டுவில், ஞாயிறு

''ஒரு நாட்டின் எதிர்கால சமுதாயம் சுயமரியாதை, தன்னம்பிக்கை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய பண்புகளுக்குக் கட்டுப்பட்டு, தன்மொழி, கலை, கலாசார உரிமைகளில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திக்கொள்வதற்கு கலைஞர்கள் முன்னின்று உழைக்க வேண்டும்.''

இவ்வாறு மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாசாலை கலையரங்கில் நடைபெற்ற நாடக விழாவிற்குத் தலைமைதாங்கிய சாவகச்சேரி எம். பி. திரு. வி.என். நவரத்தினம் பேசுகையில் கூறினர்.

மட்டுவில் கிராமமுன்னேற்றச்சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் பாடசாலை தலைமை ஆசிரியர் திரு.எஸ். மகாலிங்கம் 'கந்தன் கருணை', 'கடமையின் காதல்', 'ஆச்சிக்குச் சொல்லாதே' ஆகிய மூன்று நாடகங்களை மேடையேற்றினர்.

திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

இன்று உலகநாடுகளிலே மிகவும் முன்னேறிய நாடுகளை எடுத்துக்கொண்டால், அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணம் அந்த நாட்டுக்கலைஞர்களே. குறிப்பாக இஸ்ரேல் நாட்டை எடுத்துக்கொண்டால் அந்த நாடு இப்படிக் குறுகிய காலத்தில் மிகவும் முன்னேற்றமடைந்ததற்கு அந்நாட்டுக் கலைஞர்களே காரணமாவார்கள்.

அறிஞர் அண்ணவின் சீரிய கருத்துக்கள் எல்லாம் இன்று உலகநாடுகளிலுள்ள மக்களின் மனதில் ஆழப்பதிந்திருப்பதற்கும் முக்கியகாரணம் கலைஞர்களே. இப்படி ஒரு நாட்டின் உயிர் நாடியான கலைஞர்களின் கருத்துள்ள படைப்புகளிலே அந்த நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. எனவே எமது எதிர்கால சந்ததியினர், பண்புகளிலும் கடமை உணர்ச்சியிலும் முன்னேடியாக விளங்கும் வகையில் உங்கள் நாடகப் படைப்புகள் அமையவேண்டும்.''

6 வயதுச்சிறுவன் மரணம்

## லொறிச் சாரதிக்கு 1000 ரூபா பிணை

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று முன்தினம் காலை ஆரியகுளத்தடியில் நடைபெற்ற லொறி விபத்தில் அன்ரன் லோறன்ஸ் என்ற 6 வயதுச் சிறுவனின் மரணம் சம்பந்தமாக தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர்.

[illegible] கட்டிருந்த லொறி ஒன்றிற்கு [illegible] த்துச்செல்ல எத்தனிக்கையில் சிறுவனை மோதியதாக மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இருவரது சாட்சியங்களைப் பதிவுசெய்த பின்னர் சடலம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. லொறிச் சாரதியான சுப்பிரமணியம் செல்வரத்தினம் என்பவரை 1000 ரூபா பிணையில் [illegible] அனுமதித்த தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு. எஸ் கனகரத்தினம், சாரதியை இம் [illegible]

மலேசிய தேர்தல்

## துங்குவின் கட்சிக்கு வெற்றி நிச்சயம்

கோலாலம்பூர், மே. 11

மலேஷியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகளில் பாதிக்குமேல் இன்று காலைவரை வெளியாகியுள்ளன. இதன்படி ஆளும் கூட்டணிக்கு பெரும்பான்மைபலம் கிடைக்கும் வாய்ப்பு இருப்பது புலனாகின் [illegible] லும் கடந்தமுறையைவிட இம்முறை அவர்களுக்குக் குறைந்த வாக்குகளே கிடைத்துள்ளன.

வெளியாகியுள்ள முடிவுகளின்படி துங்கு அப்துல் ரகுமானின் ஆளும் கட்சியான கூட்டு முன்னணி இது வரை 60 தொகுதிகளில் [illegible]

## இராமசபைஉதவும்

கோப்பாய், ஞாயிறு [illegible]

# 'மலேஷியாவில் தமிழ்மொழி செல்வாக்கு இழந்து வருகிறது'

## கோப்பாய் எம். பி. அபிப்பிராயம்

— நமது நிருபர் 'யோகி' —

யாழ்ப்பாணம், திங்கள்

''மலேஷியாவில் கொஞ்சம் கொஞ்சமாக தமிழ்மொழி செல்வாக்கு இழந்து வருகிறது. வீதிப் பெயர்களோ, அரசாங்கக் காரியாலயங்களின் பெயர்களோ தமிழில் எழுதப் படவில்லை.' தரமுள்ள தமிழ்ப்பத்திரிகையும் கிடையாது''

கடந்த மாதம் மலேசியாவிற்கு சென்றுவிட்டு வந்த கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை என்னிடம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: மலேசியா மக்கள் விவசாயத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து 3 போகமும் செய்து வருகின்றார்கள். சிறிது காலத்தில் அரிசி ஏற்றுமதி செய்யலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்குண்டு

மலேசியா வளம்மிகுந்த நாடு, நல்ல வீதிகளும், அழகான கட்டடங்களும் உண்டு. மக்கள் செல்வாக்குடன் வாழ்கின்றனர். நிர்வாகப் பகுதியில் தமிழர்களும் இருக்கின்றனர். பொருளாதாரத்துறை பெரும்பாலும் சீனர்கையில்தான் இருக்கின்றது.

மலேயர், தமிழர், சீனர் ஆகிய 3 இனமும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்தால் மலேஷியா இன்னும் முன்னேறும்.

மலேயர்களுக்கு அரசாங்கம் விசேஷ சலுகைகள் செய்துவருகிறது. இதனல் சிறிது காலத்தில் ஒற்றுமை குலையும் என்ற ஐயம் மக்களிடையே நிலவுகிறது.

மலேய் மொழிதான் அங்கு அரசாங்க மொழியாகஇருக்கிறது. ஒவ்வொரு மக்களும் முன்னுக்கு வரவேண்டுமென்பதற்காக கடுமையாக உழைக்கிருர்கள். உழைப்பில் விவசாயிகள்தான் அதிகம் கவனம் செலுத்துகின்றனர்.



## தாயகம் திரும்புகிருர்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்நாட்டில் பல இடங்களிலும் கர்நாடக இசைக் கச்சேரிகள் நிகழ்த்தி, சங்கீதவித்தகர்கள் பலரின் நன்மதிப்பைப்பெற்ற நம்நாட்டுக்கலைஞர் கரவெட்டியைச் சேர்ந்த செல்வன் கே. கருணகரன் இன்று சென்னையிலிருந்து தாயகம் திரும்புகிருர். இவர் சென்னை அரசாங்க இசைக் கல்லூரியில் சங்கீதத்தில் 'டிப்ளோமா' பயிற்சி பெற்றவராவார்.

## மட்டக்களப்புச் செய்திகள்

காலஞ்சென்ற பாரத ஜனதிபதி சாகிர்ஹுசேனின் மறைவையொட்டி காத்தான்குடி முதலாம் குறிச்சி மீராபள்ளி வாசலில் கதீப் ஆதம்பாவா மௌலவி தலைமையில் விசேடமையத்து தொழுகை நடாத்தப்பட்டது.

0 0 0

### தலைமறைவு நபரைத் தேடி வேட்டை

காத்தான்குடியில் கடந்த புதன்கிழமை காலை நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகம் சம்பந்தமாக தலைமறைவாகத் திரியும் சந்தேக நபரான ஏ. எஸ். சுபைதீன் என்பவரைக் கண்டுபிடிப்பதில் மட்டக்களப்புப் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் படுகாயம் அடைந்து மட்டு நகர் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்ற [illegible]

## வங்கி இடம் மாறும்

பருத்தித்துறை, ஞாயிறு

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை அடுத்த மாத ஆரம்பத்தில் தற்போதுள்ள இடத்திலிருந்து பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு எதிரேயுள்ள மேல் மாடிக் கட்டிடத்திற்கு மாற்றப்படவுள்ளது. இங்கேயே வங்கி மனேஜர் தங்குவதற்கான வசதிகளும். தொலைபேசியும் அமைக்கப்படவுள்ளன.

## யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள்

ஓடிக்கொண்டிருந்த ஸ்கூட்டர் ஒன்றிலிருந்து விழுந்த திறப்பு பர்ஸ் ஒன்றை நாச்சிமார்கோவிலடியில் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் மாணவர் ஒருவர் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

'ஈழநாடு'

## புளுகுப் போட்டி (3)

புளுகுப் போட்டிக்கு ஏற்கனவே பத்திரிகைகளில் வெளிவந்த முழுப் புளுகுகளும்அரைப் புளுகுகளும் வருவதை போட்டிக் குழு ஏற்றுக் கொள்ள மாட்டாது என்பதை நேயர்களுக்கு மீண்டும் ஞாபக மூட்ட விரும்புகின்ருேம். கூடியவரை சொந்தச் சரக்காயிருக்கும்புளுகுகளே தெரிவு செய்யப்படும்.

### பரிசு பெறும் புளுகு

'ரஷ்யாவில் ஒருபகுதியில் ரஷ்யன் ஒருவனும் சீனன் ஒருவனும் நில ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ரஷ்யன் 50 அடிநிலத்தைதோண்டியதும் செப்பு கம்பிகள் தென்படவே சீனக்காரனை நோக்கி 'பார்த்தாயா, ரஷ்யாவில் 2000 ஆண்டுகளுக்குமுன்பே தந்திமுறை இருந்திருக்கிறது' என்று புளுகினான். பின்பு இருவரும் சீன [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பொதுத்தேர்தல் முடிவுகளில் பாதிக்குமேல் இன்று காலைவரை வெளியாகியுள்ளன. இதன்படி ஆளும் கூட்டணிக்கு பெரும்பான்மையில் கிடைக்கும் வாய்ப்பு இருப்பது புலனாகின்றது. எனினும் கடந்த முறையைவிட இம்முறை துங்குவின் ஆட்சிக்கு பலத்த வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. துங்கு மந்திரிசபையைச் சேர்ந்த மூன்றுஅமைச்சர்கள் தோல்வியுற்றிருக்கிறார்கள். பிரதம அமைச்சர் துங்கு அப்துல் ரகுமானும் துணைப்பிரதம மந்திரி துன் அப்துல் ரகுமானும் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று

துறைந்த வாக்குகளே கிடைத்துள்ளன. வெளியாகியுள்ள முடிவுகளின்படி துங்கு அப்துல் ரகுமானின் ஆளும் கட்சியின் கூட்டு முன்னணி இதுவரை 60 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கின்றது. எதிர்க்கட்சிகள் 33 தொகுதிகளில் வெற்றிபெற்றிருக்கின்றன. 'பினாங்' போன்ற முக்கிய தொகுதிகளை கூட்டு முன்னணி கோட்டைவிட்டிருக்கின்றது. 144 ஆசனங்களைக் கொண்ட மலேசிய ஆட்சிமன்றத்தில் கடந்த முறை கூட்டுமுன்னணி 122 ஆசனங்களைக் கொண்டதாய் இருந்தது.

...க்கு குறுக்கே சண்டை நடைபெற்றிருப்பதாகக் கூறப்பட்டது.

## இராமசபைஉதவும்

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் தெற்குப் பகுதியில் வசிக்கும் சலவைத் தொழிலாளர்களது நன்மையைக் கருதி அவர்களால் பாவனையிலுள்ள குளமொன்றை புனருத்தாரணம் செய்வதற்கும், கிணறு புதிதாக அமைத்து வழங்குவதற்கும் கோப்பாய் கிராம சபை முன்வந்துள்ளது.

...லிக மாஜிஸ்டிரேட் திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினார்.

ஆரியகுளம் சந்திக்கு அ...காமையில் நிறுத்திவைக்க...ட்டிருந்த லொறி ஒன்றிற்கும் வண்டில் ஒன்றிற்குமிடையில் மரணமான சிறுவன் நின்றதாகவும், பஸ் ஒன்றும், கார் ஒன்றும் வீதியால் போனபின்னர், லொறியை அங்கிருந்து எடு

செய்யப்பட்டது. ...றிச் சாரதியான சுப்பிரமணியம் செல்வரத்தினம் என்பவரை 1000 ரூபா பிணையில் ...ல்ல அனுமதித்த தற்காலி... ஜிஸ்டிரேட் திரு. எஸ் கனகரத்தினம், சாரதியை இம்மாதம் 17-ம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (கா-நி)

தில் மட்டக்களப்புப் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் படுகாயம் அடைந்து மட்டுநகர் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

0 0 0

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணன் சனிக்கிழமை காலை மட்டக்களப்பு புகையிரதநிலையத்தில் வந்து இறங்கியபோது அவரை வரவேற்க எவரும் வரவில்லையாம். இதனால் அவர் மட்டக்களப்புமாநகர பகுதிக்குள் சிறிது நேரம் தனித்து நடந்து செல்லவேண்டிய நிலை ஏற்பட்டதாம். ஒருவாறு தமிழ்வாணனின் அன்பர்கள் அவரைக் கண்டு பிடித்துவிட்டார்கள். வரவேற்க யாரும் வராததற்குக் காரணம் தமிழ்வாணன் சனிக்கிழமை மாலை வருவதாகவே முன்னர் ஒப்புக்கொண்டாராம். பின்னர் அறிவிக்காமல் திடீரென விஜயம் செய்ததால் அவர் வருகை முன்கூட்டியே யாருக்குமே தெரியாமல் போய்விட்டதாம்.

0 0 0

**விசாரணை**

அரசாங்க அதிபரின் அனுமதியின்றி காணிக்கச்சேரி நடத்தியதாகச் சொல்லப்படும் அதிகாரி ஒருவர் இப்போது மேலதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

0 0 0

**ராஜினமா வாபஸ்**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மட்டக்களப்பு பிராந்திய செயலாளர் திரு. ராஜா இம்மானுவேல் கட்சியில் இருந்து விலக கொடுத்த ராஜினமாவை திரும்ப வாபஸ் பெற்றுள்ளார். இவர் அடுத்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுவார் எனத்தெரிகின்றது.

0 0 0

**உற்சவம்**

ஆனைப்பந்தி பிள்ளையார் கோயிலின் பத்துநாள் உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் முடிவுற்றது.

## ஒய்வு

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டி அரசினர்வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக இருந்த டாக்டர் திரு வேல்முருகு இம்மாதம் முதல் ஓய்வு பெற்றுள்ளார், இவருக்கு பிரிவுபசாரம் அளிக்க நெல்லியடிப் பொது மக்களும் உடுப்பிட்டித்தமிழ் மன்றமும்ஏற்பாடு செய்து வருகிறது.

'ரஷ்யாவில் ஒருபகுதியில் ரஷ்யன் ஒருவனும் சீனன் ஒருவனும் நில ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ரஷ்யன் 50 அடிநிலத்தை தோண்டியதும் செப்பு கம்பிகள் தென்படவே சீனக்காரனை நோக்கி 'பார்த்தாயா, ரஷ்யாவில் 2000 ஆண்டுகளுக்குமுன்பே தந்திமுறை இருந்திருக்கிறது' என்று புளுகினான். பின்பு இருவரும் சீனவில் நில ஆராய்ச்சி செய்தபோது சீனன் 50 அடி ஆழம் தோண்டியும் ஒன்றும் அகப்படாதிருக்கவே, ரஷ்யனைப் பார்த்து 'பார்த்தாயா, சீனவில் 2000 ஆண்டுகளுக்கு முன்பே கம்பியில்லா தந்தி இருந்திருக்கிறது' என்றான்.'

இதை எழுதி 5 ரூபா பரிசு பெறுபவர்:-எம். எல். எம். இக்பால், 14, மொகிதீன் பள்ளிரோட், முஸ்லீம் தெரு, யாழ்ப்பாணம்.

**பாராட்டுக்குரியவை**

பின் வரும்நேயர்கள் எழுதிய புளுகுகளும் பாராட்டுக்குரியவை ஆயினும்அவை எல்லாவற்றையும் பிரசுரிக்க இடம்போதாது. சி. முத்துலிங்கம், 15,கிரியுல்ல ரோட், கட்டானை. செல்வி சாந்தி யோசப், 65, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். ரி. தர்மராசா, ப. நோ. கூ. ச. சமாசம், துணுக்காய். மிஸ். பி. எஸ். ராசையா, 99, கெமன் பில்டிங்; டிக்கோயா.

## புளுகுப் போட்டி — (3)

உங்கள் கற்பனையை நன்றாகத் தீட்டி நகைச்சுவையையும் பிரயோகித்து ஒரு புளுகை அவிழ்த்து விடுங்கள் பார்க்கலாம். புளுகு ஐம்பதுசொற்களுக்குள் அடங்கவேண்டும்.

**நிபந்தனைகள்**

ஒருவர் எத்தனை புளுகுகளையும் எழுதி ஒரே உறையில் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு புளுகுடனும் கீழ்க்காணப்படும் கூப்பன் ஒன்று இணைக்கப்படவேண்டும். அனுப்ப வேண்டிய விலாசம்: புளுகுப் போட்டி (3), 'ஈழநாடு', த. பெ. இலக்கம்: 49, யாழ்ப்பாணம்.

விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப்போக்குவரத்தும் வைத்துக்கொள்ள வேண்டாம். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ளமுடியாது. மிகச் சிறந்ததெனக் கருதப்படும் புளுகுக்கு ரூபா ஐந்து (ரூ. 5/-) பரிசுப்பணமாக வழங்கப்படும். போட்டி முடிவு திகதி 16-5-69. வெற்றி பெறும் புளுகும் அதைப் புனைந்தவரின் பெயரும் 20-5-69 இல் வெளியாகும்.

'ஈழநாடு'

புளுகுப் போட்டி - (3)

விடை: ..............................

..............................

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

# கேரளம் - தமிழ்நாடு ஆற்றுநீர் ஒப்பந்தம்

## மத்திய மந்திரி பாராட்டு

திருவனந்தபுரம்மே 11

கேரளமுதலமைச்சர் திரு நம்பூதிரிபாத்துவுக்கும்தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்குமிடையில் பரம்பிக்குளம் ஆளியாறு தண்ணீர்ப்பிரச்னை சம்பந்தமாக நேற்று ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது.

இரு மாநிலங்களும் இந்த ஆறுகளின் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதற்கும் நீர்ப்பாசன வசதிகளுக்கு பயன்படுத்துவதற்கும் இந்த ஒப்பந்தம் வழிசெய்கின்றது.

கேரள முதலமைச்சருடன் இந்தத் தண்ணீர்ப் பிரச்னை சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக தமிழ் நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி நேற்றுக் காலையில் தமது சக அமைச்சர்கள், அதிகாரிகளுடன் இங்கு வந்துசேர்ந்தார்.

இரு முதலமைச்சர்களும் மத்திய அமைச்சர் திரு.கே எல். ராவின் தலைமையில் கூடிப்பேசினார்கள். மூன்று மணிநேரம் நடைபெற்ற இந்தப் பேசுக்களில் இரு தரப்புக்குமிடையில் ஒப்பந்தம் ஏற்பட்டது.

இதுபற்றி திரு.ராவ் இரு முதலமைச்சர்களையும் பாராட்டினார். இந்த உடன்பாடு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக அமைவதாக அவர் கூறினார்.

ஒப்பந்தம்பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் பின்னர் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் பூரண திருப்தி தெரிவித்தார், உடன்பாடு ஏற்படுவதற்கு ஒத்துழைப்பு தந்த மத்திய மந்திரி திரு. கே. எல். ராவுக்கும் கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரிபாத்துக்கும் அவர்நன்றி தெரிவித்தார்.

......

## ரஷ்யாவுக்குப் போகிறார் குன்றக்குடி அடிகள்

சென்னை, மே 11

குன்றக்குடி அடிகள் அடுத்தமாதம் ரஷ்யாவுக்குப் போகவிருப்பதாக அறிவித்திருக்கிறார். தமிழ் நாட்டின் சமயம், கலாச்சாரப் பண்பாடு நாகரீகம் ஆகியவை பற்றித் தாம் பேசப்போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பின் போடுமாறு கோரிக்கை

உடுப்பிட்டி ஞாயிறு

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரிகளின் விண்ணப்ப முடிவுதிகதியை பின்போட நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கம் உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி.யுமான திரு மு. சிவசிதம்பரத்தைக் கோரியுள்ளது. இது சம்பந்தமாக மேற்படி சங்கத் தலைவர் திரு. ஜே. ஜெயக்குமார், செயலாளர் திரு. அ. தேவச்சந்திரன் ஆகியோர் உபசபாநாயகரைப் பேட்டி கண்டு விண்ணப்பப்பத்திரம் பெறுவதில் ஏற்பட்ட தடங்கல்களையும் போதிய பிரவேசப் பத்திரங்கள் பெறமுடியாத கஷ்டத்தையும் அவருக்கு விளக்கிக் கூறினர்.

## 2,000 ஆண்டு வள்ளுவர் விழா

கோப்பாய், ஞாயிறு

புத்தூர் தமிழிலக்கிய மன்றத்தினர் எதிர்வரும் 22-ம் திகதி திருவள்ளுவரின் 2000 ஆண்டுவிழாவை விமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

புத்தூர் கிழக்கு குமரகுருபரன் திறந்த வெளியரங்கில் கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் உரையரங்கு கவியரங்கு முதலியன இடம் பெறும்.

0 0 0

உடுப்பிட்டி, ஞாயிறு

திருவள்ளுவரின் இரண்டாயிரம் ஆண்டு நிறைவு நினைவு விழா அடுத்தமாதம் கரணவாயில் கொண்டாடப்படவிருக்கின்றது. கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் வள்ளுவரின் 2000 ஆண்டு பூர்த்தி விழாவை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

கரணவாய் உபதபாற் கந்தோருக்கு அண்மையில் உள்ள வள்ளுவர் அரங்கில் நடைபெறும் இவ்விழா கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் 13-வது வள்ளுவர் நினைவு விழாவாகும்.

தமிழ்நாட்டு அறிஞர்களும் ஈழத்து தமிழ் அறிஞர்களும் இவ் விழாவில் கலந்து கொள்வர்.

சாவகச்சேரியில்

# இலங்கையில் மிகப் பெரிய உப்பளம்

கோட்டை, ஞாயிறு

இரண்டுகோடி ரூபா செலவில் சாவகச்சேரியில் அரசாங்கத்தினால் நிறுவப்படவிருக்கும் உப்பளம் இலங்கையிலுள்ள எல்லா உப்பளங்களிலும் பார்க்க பெரிதாகவிருக்கும்.

இங்கு உற்பத்தியாகும்உப்பு முழுவதையும் ஜப்பான் வாங்குவதற்கு சம்மதித்துள்ளதாகத் தெரிகிறது. வருடமொன்றிற்கு 115,000 தொன் உப்பு இப் புதிய உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இதை மேலும் 200,000 ஆயிரம் தொன்னாக கூட்டவியலுமென தேசிய உப்புக் கூட்டுத் தாபனம் கருதுகிறது.

இலங்கை உப்பு நல்லதரமுடையதாதலால் அதை வாங்குவதற்குப் பலநாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. இப் புதிய திட்டத்தை பிரான்ஸ் நிபுணர்கள் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பார்கள் எனவும் இத்திட்டம் பூர்த்தியானதும் 1500 பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படலாமெனவும் தெரிகிறது.

தற்பொழுது இலங்கையில் 13 உப்பளங்கள் உள்ளன. நாட்டின் தவைவையைப் பூர்த்தி செய்யும் இவற்றில் 7 உப்பளங்கள் அரசாங்கத்தின் கீழ் உள்ளன.

......

## நன்கொடை

வவனியா, ஞாயிறு

வவனியாக் கச்சேரியில் வைத்து ரூபா 1400 பெறுமதியான மூன்றுசில்லு சைக்கிள்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டன. வவனியா கோவில்குளம் என்ற இடத்தில் திரு. எஸ். முருகமூர்த்தி திரு. எஸ். கணேசலிங்கம் ஆகிய இரு அங்கவீனர்களுக்கு வவனியா அரசாங்க அதிபர் திரு. வி. சி. பெரேரா இந்தச் சைக்கிள்களை அன்பளிப்புச் செய்தார்.

## நாவுக்கரசர் குருபூசை

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் நாவுக்கரசர் குருபூசை விழா கொண்டாடப்பட்டது. மன்றச் செயலாளர் திரு. ஆர். பி.ஹரன் இவ் விழாவுக்கு தலைமை வகித்து உரை நிகழ்த்தினார், மன்றத்தலைவர் திரு. பொ. தி. ஞானசம்பந்தர் நாவுக்கரசர் நற்பணிகள்பற்றி சொற்பொழிவாற்றினார்.

## நாரந்தனை கி. ச. தேர்தல்

வேலணை, ஞாயிறு

13 வட்டாரங்களைக் கொண்ட நாரந்தனை கிராம சபைத் தேர்தல் இம்மாதம் 26-ம்திகதி நடைபெறவிருக்கிறது.

5 வட்டாரங்களில் அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## இந்து வாலியர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

கைதடி இந்துவாலிபர் சங்கம் புதுவருட உத்தியோகத்தர்கள் வருமாறு:

தலைவர், திரு. சு. கனகசபாபதி, உபதலைவர்கள்: திருவாளர்கள் ஆ. பொன்னையா, வ. முத்துக்குமாரசுவாமி, சி. முருகேசு, பொதுச்செயலாளர்: திரு. ஆ. கந்தையா, இணைச்செயலாளர்கள்: திருவாளர்கள் கோ. தேவராசா, சு. செல்வரத்தினம், பொருளாளர்: திரு. வ. சுப்பையா, சமயப் பிரசார அமைச்சர்: திரு: சி. சரவணமுத்து, பஜனைச் சபைத்தலைவர்: க. விசயரத்தினம், சைவமாநாட்டுச் சபைச் செயலாளர்; சு. சின்னத்தம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நாம் புத்துயிரூட்ட முயலும் கிராம கைவினைத் தொழிலைக் கற்று பின்பற்ற வேண்டும். உங்கள் விடுதலைக்கு இதுதான் உயிர்நாடி.

— மகாத்மா காந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் சித்திரை மாதம் 30-ந் திகதி (12-5 69)

## சிங்களம் படிப்பதா இல்லையா?

அரசாங்க சேவையிலும் தனியார் துறையிலும் பணிபுரியும் தமிழ் ஊழியர்கள் சிங்களம் படிப்பதற்கு உதவியளிக்குமுகமாக வெள்ளவத்தையில் முதியோர் கல்வி நிலையமொன்றை கல்வி அமைச்சு இந்த மாதத்தில் திறக்கவிருக்கிறது. அரசாங்க ஊழியர் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்காக சில அரசாங்க இலாகாக்கள் சிங்கள வகுப்புக்களை நடத்தி வந்ததுடன் சிங்களம் படிப்பதற்காக சில மணி நேரத்தை ஒதுக்கியும் வந்தன. இதனால் பயன்பெற்றவர்கள் இல்லாமலில்லை. தனியார் துறையினருக்கு இந்த வாய்ப்பு இருக்கவில்லை. தனியார் துறை ஊழியர் பலர் தமது சொந்தப்பணத்தைச் செலவிட்டு அலுவலக நேரத்துக்குப்பின்னர் பல தொல்லைகளுக்கிடையிலும் சிங்களம் படித்தனர். இந்நிலையில் வெள்ளவத்தையில் வயது வந்தோர் கல்வி நிலையம் ஒன்றைகல்வி அமைச்சு ஆரம்பித்து சிங்களமும் ஆங்கிலமும் கற்றுக் கொடுக்க முன்வந்திருப்பது கொழும்பு நகரில் வாழும் பலருக்கும் பேருதவியாக இருக்கும். இந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்து செயல் படுத்த முனைந்துள்ள கல்வி அமைச்சைப்பாராட்ட வேண்டும். இதே நிலையத்தில் தமிழையும் கற்பிக்க ஒழுங்கு செய்தால் தமிழ் தெரியாத, தமிழில் கடமையாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும் அரசாங்க, தனியார் துறை ஊழியருக்கும் உதவி புரிவதாக இருக்கும். கல்வி அமைச்சு இதைப்பற்றி இனியும் சிந்திக்க இடமுண்டு.

வெள்ளவத்தையில் இந்த நிலையத்தை ஆரம்பிப்பதால் கொழும்பு நகரில் பணி புரியும் அரசாங்க, தனியார் துறையினருக்கு வேலை கிடைக்காதுஎன்றுகூறுவதில் ஓரளவுஉண்மையிருந்தாலும் திறமைக்குமுதலிடம்கொடுத்துக் கணிக்கும் சந்தர்ப்பம் ஏற்படும் போது சிங்களம் படித்த தமிழர்களுக்குவேலை இடைக்காதென்று சொல்ல முடியாது. அரசாங்க சேவையை நடுத்தாலும் தனியார் துறையில் ஏதாவது பணி புரிவதற்கு சிங்களம் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. உத்தியோகத்தை நம்பியிருப்பதால் பயனில்லையென்றாலும் எல்லோருமே விவசாயத்திலும்கைத் தொழிலிலும் ஈடுபட முடியுமா? தனிப்பட்ட தொழில் புரிந்தாலும் அரசாங்கத்துடனும் தனியார் துறையினருடனும் தொடர்பு கொள்வதற்கும் எதிர் காலத்தில் சிங்களம் அவசியம் தேவைப்படும். இவைகளெல்லாவற்றையும் விட ஒரு நாட்டின் பெரும்பான்மை மக்களின் மொழியை சிறுபான்மையினர் கற்றறிந்திருப்பதால்பல வழிகளிலும் நன்மையேயன்றித் தீமையில்லை. ஒரு மனிதன் எத்தனை மொழிகளை கற்று அறிகிறானோ அத்தனைக்கும் அவனது அறிவு வளர்ச்சியடையும்.

வடக்குகிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் சிங்களமும் ஒரு பாடமாக படிப்பிக்கப்பட்டு வந்தது, கல்லூரி நிர்வாகத்தினரும் பெற்றோரும்மாணவரும்விரும்பிப் படிப்பித்து,படித்துவந்தனர். 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் சிங்களம் மட்டும் மசோதா கொண்டு வரப்பட்ட போது தான் தமிழ் மக்களின் தன்மானத்துக்கே இந்தமசோதா ஒரு சவால் விடுவதாகக்கருதி சிங்களம் படிப்பதை தமிழ் பகுதிகளில்நிறுத்திக்கொண்டனர். 1956-ம் ஆண்டிலிருந்த நிலைக்கும் இன்றுள்ள நிலைக்கும் வேறுபாடு அதிகம்

இன்று அரசாங்க ஊழியர்

# பாத்திமா தேவதாயார் உலகுக்கு அளித்த ஆறு அறிவுரைகள்

## இன்று அவர்களின் தினம் கொண்டாடப்படுகிறது

**உலகமெங்கும் கத்தோலிக்கர்கள் பாத்திமா நாயகியின் தினத்தை இன்றும் நாளையும் கொண்டாடுகிறார்கள். இதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

இன்று உலகமெங்குமுள்ள கத்தோலிக்கர்கள் பாத்திமா நாயகியின் தினத்தை மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறார்கள் ஈழத்திலும் பண்டத்தரிப்பிலுள்ள பாத்திமாகிரி உட்பட பல்வேறு பாத்திமா யாத்திரைத் தலங்களிலும் இத்தினம் சிறப்பு நிகழ்ச்சிகளுடன் இடம் பெறுகிறது.

போர்த்துக்கல் தேசத்தில் பாத்திமாஎன்றதொரு கிராமம் உண்டு. இங்குதான் தேவதாயார் 52 வருடங்களின் முன்னால் இதே தேதியில் 3 இடைச் சிறுவர்கட்கு காட்சியளித்தார். பாத்திமாவில் தேவதாயார் அளித்த ஆறு காட்சிகளின் போதும் பல அறிவுரைகள் வழங்கப்பட்டன. இவ்வறிவுரைகள் பாத்திமா வெளியீடு என்றபெயரால் முழு உலகிலும் பரவியுள்ளன.

பாத்திமா செய்திகளைப் பின்வருமாறு சுருக்கமாக கூறலாம்:

O தினசரி செபமாலைசொல்லுதல். O தீய செயல்கள் செய்வோருக்காக ஒறுத்தல் முயற்சிகளை அனுசரித்தல். O மரியாயின் மாசற்ற இருதயபக்தியை அனுசரித்தல் O முதற்சனிக்கிழமைகளில் பூசைகண்டு நன்மையருந்தி பாப்பரசரின் கருத்துகட்காகஒப்புக் கொள்ளுதல்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

### சாமுவேல் பெனடிக்ற்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

உலகெங்கணும் தினசரி கட்டிக் கொள்ளப்படும் பாவாக்கிரமங்கட்கு தண்டனையாகவே இறைவன் யுத்தங்களை அனுப்புகிறார் என பாத்திமாவில் தேவதாயார் கூறினார். இறைவனால்வெறுக்கப்படும் பாவங்களுள் காம இச்சையே முக்கியமானதெனவும் அவர் குறிப்பிட்டார். உலகம் தனது அக்கிரமங்களைக் குறைத்துக் கொள்ளாவிடில் பல பயங்கரங்கள் நிகழும். எனினும் இறுதியில் மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும் என்றும் தேவதாயார் கூறியிருக்கிறார்.

பாத்திமா செய்தியை உலகெங்கும் தெரிவிப்பதற்காக போர்த்துக்கீசர் பாத்திமாவில் தேவதாயாரின் காட்சி பெற்று இன்னமும் சிவந்தராயிருக்கும் சிஸ்ரர் மேரி லூசியா (வயது 62)வின் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்ட பாத்திமா சொரூபங்கள் யாத்திரையாக உலகின் பலபாகங்கட்கும் கொண்டு செல்லப்பட்டன. 1950ம் ஆண்டில் இந்த உலகயாத்திரைச் சொரூபம் இலங்கையிலும் மூன்று மாதங்கள் வரையில் சுற்றுப் பிரயாணம் செய்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### தமிழகத்தில்

இலங்கைத் தமிழரிடையேயும் பாத்திமா பக்தியைப் பரப்ப புண்ணிய மரியாயின் பக்தரான வண கென்றி ஜெலாண்ட் அடிகளார் இற்றைக்கு 23 வருடங்களுக்கு முன்னால் பண்டத்தரிப்பு என்ற கிராமத்தில் இராச முருக்கடி என்ற சிறு காட்டுத்தலத்தை அழித்து அவ்விடத்துக்கு பாத்திமாகிரி புதியநாமமிட்டார். போர்த்துக்கீசர் காலத்தில் நாட்டப்பட்டதாக அறியப்பட்ட இந்த இராசமுருக்குக்கு மரத்தில் பேய்கள் உறைந்திருந்தகாரணத்தால் அவ்விடத்துக்கு எவரும் செல்வதில்லை.

எனவே பிரான்சியரான இவ்வடிகளார் இராசமுருக்கின்பக்கமாக நெடியதோர் தூணை எழுப்பி அதன் உச்சியில் பாத்திமா சொருபமொன்றை நிறுவினர். பேய்குப் நிறைந்த இராச முருக்கடி தேவதாயாரா வதியும் அரசிவரத்தடியிற்று காடடைந்த இத்தலததில் சிற்றாலயமும் யாத்திரிகர்கள் தங்க சிறுமடங்களும் தண்ணீர் அருந்துவதற்கு வசதியாக சிணறொன்றும் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து பக்தர்கள் திரள்திரளாக அங்கு சென்று பாத்திமா அன்னையின் அருளை இறைஞ்சி வருகின்றனர்.

இங்குள்ள பிரதான பீடத்திலுள்ள அழகு மிக்க சொரூபம் பாத்திமாவில் தேவதாயாரின் காட்சி பெற்ற சிஸ்ரர் மெரி லூசியாவின் மேற்பார்வையில் பாத்திமா அன்னையின் அதே அளவுப் பிரமாணங்களுக்கமைய கர்மாலிமரமொன்றில் செதுக்கி யெடுக்கப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## யாழ். ஆஸ்பத்திரி டாக்டர் இடமாற்றம் செய்யப்படுவார்?

யாழ்ப்பாணம், திங்கள் பெண்டாக்டர் ஒருவரை கடமையிலிருக்கும் போது அவதூறாக ஏசியதென்றகுற்றச்சாட்டின்பேரில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் சிரேஷ்ட ஆண்டாக்டர் விரைவில் இடமாற்றத்துக்கு உட்படுத்தப்படலாம் எனத் தெரிகிறது.

ஏற்கனவேயே தண்டனை இடமாற்றத்துடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கடமையாற்ற வந்த குறிப்பிட்ட டாக்டர் மீதான விசாரணையை ஆஸ்பத்திரி வைத்திய சுப்பிரிண்டன் டாக்டர் பி. சண்முகநாதன் நடத்தி வருகின்றார்.

கடைசிச் சாட்சி ஒருவரின் வாக்குமூலம் இன்று பதிவு செய்யப்பட விருக்கின்றது. குறிப்பிட்ட டாக்டரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலிருந்து உடனடியாக வெளியே இடமாற்றம் செய்யவேண்டு மன சுகாதார அமைச்சை கோருவது பற்றி நேற்று முன்தினம் நடைபெற்ற ஆஸ்பத்திரிக் கமிட்டிக் கூட்டத்தில்நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

இக் கூட்டத்தில் சபை அங்கத்தவர்களில் ஒருவரான திரு மு. பூபாலசிங்கம் ஈழநாடு பத்திரிகையில் குறிப்பிட்ட சம்பவம் பற்றி வெளிவந்த செய்தியை வாசித்துக் காட்டியதாகவும் அது முற்றிலும் உண்மையென மற்றவர்கள் ஒப்புக் கொண்டதாகவும் குறிப்பிட்ட டாக்டர்மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென திரு. பூபாலசிங்கம் ஒரு பிரேரணை கொண்டு வந்த போது பலர் அதை ஆதரித்ததாகவும் தெரியவருகிறது.

(கா. நி)

## யாழ் மாவட்ட கிராமசேவகர் நியமனத்தில் அசிரத்தையாம்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். மாவட்டத்துக் போதுமான கிரா[illegible] சேவையாளர்களை நியமிப்பதில் உள்நாட்டமைச்சு அசி[illegible]த்தை காட்டுவதாக இங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதிருப்தியடைந்துள்ளார்கள்,

ஏற்கனவே யாழ். மாவட்டத்துக்கு 14 புதிய கிராம சேவையாளர்களை நியமிக்க உள்நாட்டமைச்சு சம்மதம்

றொடீஷியா - ஒருகண்ணோட்டம்

# அயன் ஸ்மித் கெடுபிடி

## ஐயாறன் எழுதுவது

சென்னைப் பததிரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். ''திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான திருப்பெருந்துறை ஆளுடைய கோயில் திருப்பணித் துவக்கவிழா'' என்ற தலைப்பிட்டிருந்தது.

''ஸ்ரீமாணிக்கவாசகப்பெருமானை சிவபெருமான் குருந்த மர நிழலில் ஞானாசிரியனாக எழுந்தருளிவந்து ஆட்கொண்டருளித் திருவாசகம் பெற்ற தலமும், ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளே திருவருள் வழிநின்று எக்கோயிலும் ஒப்பாதல் இல்லையாம்படி நிர்மாணித்த சிற்பக்கலை சிறப்புவாய்ந்ததுமாகிய திருப்பெருந்துறை ஆளுடையார் திருக்கோயிலைப் புதுப்பிக்கும் திருப்பணியின்'' துவக்கவிழா சித்திரை மாதம் 16-ந் திகதி நடைபெற்றதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழகத்திலுள்ள சைவ ஆதீனங்களில் அதிக பண வசதிகள் உள்ளது, திருவாவடுதுறை என்று கூறுவர். அந்த ஆதீனத்தின் நிர்வாகத்திலுள்ள அக்கோயில் திருப்பணி புதிய குருமகா சந்நிதானத்தின் மேற்பார்வையில் சிறப்பாக நிறைவேறுமென்பதில் ஐயமில்லை.

0 0 0

இந்தச் செய்தியைப்பார்த்ததும் சென்ற ஜனவரி மாதத்தில் அக்கோயிலுக்கு நேரில் சென்று தரிசித்த விவரங்கள் எல்லாம் நினைப்புக்கு வந்தன. தமிழகத்தில் எங்குமே இல்லாத முறையிலுள்ள அக்கோயிலின் சிற்பச் சிறப்புகள் யாரையும் பிரமிக்கவைககும். கருங்கற்கள் விதவிதமான கதைகளைச் சொல்லுவதுடன், கோயிலை எவ்வளவு சிறப்பாக அலங்கரித்துள்ளன! அந்தமாதிரி வேலை செய்யக்கூடிய சிற்பிகள் தமிழகத்தில் இன்னும் இருக்கிறார்களாயின் அதுபெருமைப்படத்தக்கதாகும். வேறு கோயில்களுக்கான திருப்பணி வேலைகளுக்குச் செய்யப்படும் ஒப்பந்தத்தில் ''ஆவுடையார் கோயில் சிற்பம் நீங்கலாக'', மற்ற வகைகளில் வேலை செய்வதாகவே குறிப்பிடுவார்களாம். அவ்வளவு தனிச் சிறப்பு வாய்ந்தது அக்கோயிலின் சிற்ப வேலைப்பாடுகள்.

அக்கோயில் முன் மண்டபத்திலுள்ள காரியாலயத்தில் ''திருவாவடுதுறை ஆதீ

தெற்குப் பார்த்த அக்கோயிலில் திருவிழா எல்லாம் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்குத்தான். வேறு உற்சவ மூர்த்திகளுமில்லை. திருப்பெருந்துறையில் ஸ்ரீ மாணிக்கவாசகர் கட்டிய கோயில் இதுவாயின், அவர் தமது வாழ்க்கை வரலாற்றுச் சிற்பங்களையே செய்வித்திருப்பாரா? தமக்கே திருவிழா நடத்தச் செய்திருப்பாரா? அக்கோயில் ஸ்ரீ மாணிக்கவாசகருக்காக, சைவஉலகம் நன்றியுடனும் பக்தியுடனும் கட்டிய கோயிலென்றும் என்மனதில் பட்டது. அங்கு மூலஸ்தானத்தில் சிவலிங்கமுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே ஸ்ரீசுவாமிகள், குருந்தமரத்தடியில் உபதேசம் பெற்ற இடமும், அவர் கட்டிய கோயிலும், குதிரை வாங்கச் சென்ற இடமும் வேறிடத்தில்தான் இருக்க வேண்டுமென்றும், அந்த இடம் ஈழத்திலுள்ள மாதோட்டமாக இருக்குமென்றும் அதுவே திருப்பெருந்துறையாக இருக்க வேண்டுமென்றும் முதலியார் இராசநாயகமவர்கள் தமது ''யாழ்ப்பாண சரித்திரத்'' தில் எழுதியது உண்மையென்றும் எனக்கு ஊர்ஜிதமாயிற்று.

ஸ்ரீசுவாமிகளுக்காகக் கட்டிய இக்கோயிலும் சைவ உலகுக்கு மிகவும் முக்கியமானதே. என்றாலும் சுவாமிகள் கட்டிய திருப்பெருந்துறைக் கோயிலைப்பற்றிய ஆராய்ச்சியை ஈழத்து சைவ அறிஞர்கள் செய்து, தமிழகமும் அதை ஒப்புக்கொள்ளச் செய்வதுடன், திருக்கேதீச்சரத் திருப்பணியிலே தமிழகமும் கவனம் செலுத்தச் செய்வது மிகவும் அவசியமான பணியாகும்.

0 0 0

சரவணையில் படிப்பு முடிந்த சில சைவவாலிபர்கள் சேர்ந்து, சங்கம் அமைத்து, திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூசையன்று சுமார் 500 பேருக்கு அன்னதானம் செய்து, சிறப்பாகக் கொண்டாடினர். வேலையில்லைஎன்று சோம்பி இராமல், கமம் செய்வதுடன் இவ்வித நற்பணியில் ஈடுபட்டு வாலிபர்கள் உற்சாகமாகப் பணி செய்வது மேலான முன்மாதிரியாகும் அவர்கள் தொண்டு வாழ்க!

0 0 5

மஞ்சனே மணியுமானாய் மரகதத் திரளுமானாய், நெஞ்சுளே புகுந்துநின்று நினைதரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியும் நீங்க்க இ-
முடியும்.

வெள்ளவத்தையில் இந்த நிலைமைத்தை ஆரம்பிப்பதால் கொழும்பு நகரில் பல புதியும் அரசாங்க, தனியார் துறை ஊழியர் மட்டும் தான் பயனடைய முடியும். இதே போன்று நாட்டின் இதர நகரங்களிலும் வயது வந்தோர் கல்வி நிலையங்களை கல்வி அமைச்சு நிறுவினால் நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க, தனியார் துறைஊழியர் பயனடைய முடியும். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் இந்த நிலையங்களில் கற்றுக் கொடுக்க வசதி செய்தால் தமிழ் ஊழியர் சிங்களமும் சிங்கள ஊழியர் தமிழும் கற்கவும் இருபகுதியினரும் ஆங்கிலத்தைக் கற்கவும் வாய்ப்புக் கிடைப்பதுடன் அரசாங்க, தனியார் துறையினருடன் தொடர்பு கொள்ளும் பொது மக்களுக்கு வீண்கஷ்டம் ஏற்படாமல் தவிர்க்கவும் மொழிப் பிரச்னை குறையவும் மார்க்கம் கிடைக்கும்.

வளர்ந்தோர் கல்வி நிலையம் ஒரு புறமிருக்கட்டும். இவை அரசாங்க, தனியார் துறை ஊழியர்களுக்கு தனியாக அமையும் நிலையம் தான். இத்துறைகளிலுள்ள தமிழ் ஊழியர்களில் பலரும் இப்போதே தங்கள் சொந்தச் செலவில் தனிப்பட்ட கல்வி நிலையங்களிலும், தனிப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டும் சிங்களம் படித்துவருகின்றனர். அதனுல் அவர்கள் ஓரளவு பயனுமடைந்துள்ளனர். இவர்கள் தவிர வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளும், மற்றும் படித்த இளைஞர்களும் கூட தனிப்பட்ட கல்வி நிலையங்களிலும் பிரத்தியேகமாக ஆசிரியர்களை அமர்த்தியும் சிங்களம் கற்று வருகின்றனர். வசதியும் வாய்ப்புமுள்ளவர்கள் தான் இப்படிச் சிங்களம் கற்கக் கூடியதாக இருக்கிறது. அரசாங்க உத்தியோகம் 'பெறுவதாயிருந்தாலும் தனியார் துறையில் வேலை கிடைப்பதாக இருந்தாலும் சிங்களம் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்ற நிலைவந்து விட்டது. இந்நிலையில் வாய்ப்பும் வசதியுமுள்ளவர்கள் சிங்களத்தைப் படிப்பதுபோல் வாழ்க்கையில் முன்னேற சந்தர்ப்பமுண்டு இந்தவசதியில்லாத ஏழை, எளிய பிள்ளைகள் ஒரு சந்ததி பின் தங்கி நிற்க வேண்டிய நிர்ப்பந்த மேற்படும். அரசாங்க உத்தியோகம் சிங்களம் படித்தாலும்

பகுதிகளிலிருந்துங் கொண்டனர். 1956-ம் ஆண்டிலிருந்த நிலைக்கும் இன்றுள்ள நிலைக்கும் வேறுபாடு அதிகம்

இன்று அரசாங்க ஊழியர் பலரும் சிங்களம் படிக்கிருர்கள், தமிழ்ப் பகுதிகளான வடக்குகிழக்கு மாகாணங்களில் தனிப்பட்ட கல்வி நிலையங்களில் சிங்களவகுப்புகள் நடைபெறுகின்றன. பிரத்தியேக ஆசிரியர்களை அமர்த்தி பிள்ளைகள்பலர்சிங்களம்படிக்கிருர்கள். சிங்களம் படிப்பது சம்பந்தமாக பழைய அரசாங்க ஊழியர் புதிய அரசாங்க ஊழியர் விஷயத்தில் அரசியல் தலைவர்களுக்கிடையில் இன்னும் தெளிவான கொள்கைகளுக்கப்படவில்லை சிங்களம் படிப்பது சம்பந்தமாகவும் அரசியல் தலைவர்கள் 1956-ம் ஆண்டிலிருந்த நிலைமைக்கும் இன்றுள்ள நிலைமைக்கும் ஏற்ப தமது கொள்கையைத் தெளிவுபடுத்தவில்லை. சிங்களம்படிப்பதா படிக்காமல் விடுவதா என்பது ஒரு சந்ததியின் வாழ்வைப் பொறுத்த விஷயம். இனியும் இதுபற்றி தமிழ்த் தலைவர்கள் கண்ணைமூஞ்சி விளையாடாமல் உடனடியாகத் தங்கள் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

## அகிலஇலங்கை..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பில் இருந்து சென். மைக்கல்ஸ், மெதடிஸ் சென்றல் ஆகியனவும், பிறவும் சப். பிரகாமுவா மாகாணத்தில் இருந்து கேகாலை வித்தியாலயம், சென். ஜோன்ஸ், பெய்கோல் கல்லூரி ஆகியனவும் பிறவும் கலந்துகொள்கின்றன

ஊவா மாகாணத்தில் இருந்தும் கொழும்பு வடக்கில் இருந்தும் பல பாடசாலைகள் கலந்துகொள்கின்றன.

1-ம் நாள் விழாவை வடமாநில கல்வி அதிபதி திரு. தணிகாசலமும் 2-ம் நாள் விழாவை விளையாட்டு அமைச்சு டைரக்டர் எஸ். டி. குணவர்த்தனவும் ஆரம்பித்துவைப்பார்


## தேவை

ஆங்கிலத்தில் தட்டெழுத்தும் காரியாலயக் கடமைகளும் செய்யக்கூடியதாக ஒருவர் தேவை. கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல.1115, ஈழநாடு லிமிடெட், யாழ்ப்பாணம். 1115


ரொடீஷியா - ஒருகண்ணோட்டம்

# அயன் ஸ்மித் கெடுபிடி பிரிட்டனுக்கு தலையிடி

ரொடீஷியாவில் வாழும் பெரும்பான்மைக் கறுப்பு ஆபிரிக்க மக்களுக்கு இருந்து வரும் கொஞ்ச உரிமைகளையும் பிடுங்கிக்கொள்வதற்காகச் சட்டவிரோத ஆட்சியாளரான திருவாளர் அயன்ஸ்மித் அரசியல் திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கிருராய்.

இந்த அரசியல் திட்டம் பற்றி அவரே பெருமிதமாகக் கூறியிருக்கிருர். தமது திட்டம் ரொடீஷியர்களினுல் ஏற்றுக்கொள்ளப்படுமாளுல், ரொடீஷியாவில் பெரும்பான்மை ஆட்சி ஏற்படவேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கின்ற தனது எதிரிகளின் கனவுகளுக்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிடும் என்கிருர் அவர்.

ரொடீஷியாவில் பெரும்பான்மை ஆட்சி ஏற்படவேண்டுமென்று அந்த நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள் மட்டும் சொல்லவில்லை, ஆபிரிக்க-ஆசிய நாடுகள் உள்ளிட்டு பிரிட்டனும் தான் கூறுகின்றது. அந்த அடிப்படையில்தான் ரொடீஷியாவுக்கு பிரிட்டன் சுதந்திரம் வழங்க மறுத்தது அயன்ஸ்மித் தாமே சுயேச்சையாகச் சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்டதையும் பிரிட்டன் ஏற்றுக்கொள்ள மறுத்தது. எனவே அவர் தம் எதிரிகளென்று பிரிட்டனையும் சேர்த்துத்தான் கூறியிருக்கின்ருர். இதை அவர் சொல்லித்தான் தெரிந்து கொள்ளவேண்டுமென்றில்லை. சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்ட பின்னர் பிரிட்டிஷ்ஆட்சியை மட்டுமின்றி பிரிட்டிஷார் மிக உன்னதமாகப் போற்றி வரும் பிரிட்டிஷ் மகாராணியைக்கூட உதாசீனம் செய்திருக்கிருர் அவர்.

பிரிட்டிஷ் இராணி ஏகாதிபத்தியத்தின் சின்னமாக விளங்கியபோதிலும் பிரிட்டிஷ் மக்கள் அவரைத் தமது பாரம்பரிய பண்பாட்டுச் சின்னமாக மதித்துப் போற்றி வருகின்றமையால் மன்னர் ஆட்சியில் நம்பிக்கை வைக்காத நாடுகள் கூட அவரை மதிக்கின்றன. அவரை மதிப்பதிளுல் பிரிட்டிஷ் மக்களின் கருத்துக்கு மதிப்பளிப்பதாக அந்த நாடுகள் கருதுகின்றன. அயன்ஸ்மித் பிரிட்டிஷ் ஆட்சியாளரை மட்டுமின்றி மகாராணியையும்கூட உதாசீனம் செய்துவிட்டார். இருந்தும் பிரிட்டிஷ் அரசாங்கம் அவரோடு சமாதானம் பேசுவதிலும், பேரம் பேசுவதிலும் இன்னமும் ஈடுபட்டுக் கொண்டிருப்பது விந்தையாக இருக்கின்றது.

ரொடீஷியாவின் பெரும்பான்மைமக்களின் ஆட்சிக்கு உத்தரவாதம் இல்லாதவரை அந்த நாட்டுக்குச் சுதந்திரம் வழங்க இயலாதென்று பிரிட்டனும், திரு. வில்ஸனும் என்னதான் கரடியாய்க் கத்திவந்தபோதிலும் அயன்ஸ்மித் "உனக்கும் பேபே, உன் அப்பனுக்கும் பேபே" என்று கூறும் தோரணையில் தம் காரியங்களை செய்துகொண்டுபோகிருர் இவைகளைப் பார்த்துக்கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கமும் இருக்கின்றது.

ஆசிய நாடுகள் குறிப்பாக காமன்வெல்த் நாடுகள் அயன்ஸ்மித்தின் ஆட்சியை வன்மையாகக் கண்டித்திருப்பதுடன் அங்கு பெரும்பான்மை மக்கள் ஆட்சிக்கு வழிவகுக்கவேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளன. ஆபிரிக்க நாடுகள் பலவும் இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரியுள்ளன. இவை பற்றியெல்லாம் அவருக்குச் சற்றும் கவலையில்லை இந்த நாடுகள் எல்லாவற்றையும்தான் அவர் தம் எதிரி என்கிருர். ஏன் அவரது ஆட்சிக்கு விரோதமான ஐ. நா. அங்கத்துவ நாடுகள் எல்லாவற்றையுமே அவர் தம் எதிரிகள் என்கிருர். இந்த எதிரிகளின் கனவுகள் எல்லாவற்றுக்கும் சாவுமணி அடிக்கப்போவதாக வேறு கொக்கரிக்கின்ருர். எல்லோரும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிருர்கள்.

அயன்ஸ்மித் சுயாட்சிப் பிரகடனம் செய்தவுடன் பிரிட்டன் சட்டவிரோத ஆட்சியென்று பிரகடனம் செய்தது. பொருளாதாரத் தடை விதித்தது அங்கு எண்ணெய், எரிபொருள் போகாதபடியும் தடை விதித்தது. இருந்தும் என்ன பயன்? தென்னுபிரிக்காவும், மொஸாம்பிக்கும் அந்த நாட்டுக்கு உதவமுன் வந்தன. அதனுல் இந்தத் தடைகளாலும் ஒரு பயனும் விளையவில்லை. காலப்போக்கில் ரொடீஷியா பணிந்துவிடும் என்று பிரிட்டன் எதிர்பார்த்தது. ஆனுல் அயன்ஸ்மித்தின் கைதான் ஓங்கியிருக்கின்றது.

அபிரிக்கர்களின் உரிமைகளுக்கு உலைவைக்கும் அரசியல் சட்டத்தைப்பற்றி அறிவதற்குமுன் அவர் தென்னுபிரிக்காவுக்கும் போய் அங்கு நிறவெறி அரசாங்கத்தோடு ஆலோசனைகள் நடத்திவிட்டுவந்தார். இனிமேல் அவர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் தென்னுபிரிக்காவின் உதவி நிச்சயம் கிடைக்கும்.

கறையான் புற்றெடுக்க பாம்பு குடிபுகுந்த கதையாக ரொடீஷியா இருக்கின்றது. சுதேசிகளான கறுப்பர்கள் வெள்ளையரின் கொடுமைக்காளாகித் தவிக்கிருர்கள். இந்தநிலை நீடிப்பதும் நீடிக்காமலிருப்பதும் பிரிட்டனின் கையில்தான் இருக்கின்றது. பிரிட்டன் மீது ஆசிய - ஆபிரிக்கநாடுகள் வைத்துள்ள நம்பிக்கை நீடிப்பதற்கும் ரொடீஷிய விஷயத்தில் அது இனி எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை பொறுத்துத்தான் அமையும்.

கெரிபியன் தீவான அங்குய்லாவும் கறுப்புமக்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்குஎதிராக கொடி உயர்த்தியபோது அங்கு அவசரஅவசரமாக பாரா துருப்புகளை பிரிட்டன் அனுப்பிவைத்தது. ஆனுல் ரொடீஷியாவில் வெள்ளையர்கள் சிறுபான்மையினராய் இருந்துகொண்டு சட்டவிரோதமாக ஆட்சி புரிவதைத் தடுக்கும் வகையில் அதட்டிப் பேசுவதற்குக்கூட தயங்குகின்றது. இவ்வாறு ஆசிய ஆபிரிக்க நாடுகளில் அபிப்பிராயங்கள் உருவாகிவருவதையும் பிரிட்டன் பார்த்துக்கொண்டு வாளாவிருக்க முடியாது. ஏனென்ருல் அடங்கிக்கிடக்கும் ஆபிரிக்க மக்கள் என்ருே ஒருநாள் வெகுண்டெழத்தான் செய்வார்கள். அப்பொழுது பிரிட்டனின் வெள்ளைமுகம் கறுத்துப்போவதை அவர்கள் விரும்பமாட்டார்கள்.

—பேனு

துள்ளார்கள்,

ஏற்கனவே யாழ். மாவட்டத்துக்கு 14 புதிய கிராமசேவையாளர்களை நியமிக்க உள்நாட்டமைச்சு சம்மதம் கொடுத்திருந்தபோதும், இப்போது அவர்களுக்குச் சம்பளம் வழங்கப் பணம் இல்லை என்று காரணம் காட்டி அதனைக் கைவிட்டுள்ளதாம்.

புதிய ஒரு வேண்டுகோளில் யாழ் மாவட்டத்துக்கு குறைந்தது 5 புதிய கிராமசேவையாளர்களையாவது நியமித்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உள்நாட்டு அமைச்சு இலாகாவைக் கேட்டுள்ளனர்:

புதிய 5 கிராமசேவையாளர்களையும் துணுக்காய், பூநகரி, சாவகச்சேரி, பருத்தித்துறை, தெல்லிப்பழை ஆகிய 5 அதிகாரிகள் பிரிவிலும் நியமிக்கவேண்டியிருக்கின்றதென்றும் இந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கா-நி)

யிலின் சிற்ப வேலைப்பாடுகள்.

அக்கோயில் முன் மண்டபத்திலுள்ள காரியாலயத்தில் "திருவாவடுதுறை ஆதீனம், ஸ்ரீ ஆத்மநாதஸ்வாமி ஆலயம், ஆவுடையார் கோயில்" என்று பெயர்ப் பலகையில் எழுதியிருந்ததை என் டயரியில் அப்படியே எழுதிக்கொண்டேன். அதில் திருப்பெருந்துறை என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை. அப்படியிருக்கையில், தமிழகப் பத்திரிகை விளம்பரத்தில் "திருப்பெருந்துறை ஆளுடையார் கோயில்" என்று புதிதாகச் சேர்த்த காரணம் விளங்கவில்லை. அந்த ஊர் மக்களும் திருப்பெருந்துறை என்ற பெயரை பாவிப்பதில்லை. அந்தக் கோவிலைப் பற்றிய புராண வரலாறு ஏதும் அச்சடித்துள்ளதா என்று விசாரித்ததில் அப்படி ஒன்றுமில்லை என்றும் அங்கு தெரிவித்தனர்.

தொண்டு வாழ்க!

0 0 5

மஞ்சனே மணியுமானுய் மரகதத் திரளுமானுய், நெஞ்சுளே புகுந்துநின்று நினைதரு நிகழ்வினுனே, துஞ்சும்போதாகவந்துதுணையெனக் காகிநின்று, அஞ்சலென் றருள வேண்டும் ஆவடுதுறையுளானே.

—அப்பர் அடிகள்

## திறப்பு விழா

அளவெட்டி, திங்கள்

பலாலி வடக்கு இந்து இளைஞர்களால் நிறுவப்பட்ட கலைவாணி சனசமூக நிலைய திறப்பு விழா இன்று நடைபெற இருக்கிறது. மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி இந்நிலையத்தைத் திறந்துவைப்பார்.

## இரத்தம் செலுத்தப்பட்டது

சென்னை, மே 11

சென்னை பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் தமிழ்நாடு உணவுஅமைச்சர் திரு. ஏ கோவிந்தசாமி நேற்று பிற்பகல் ஓரளவு நிம்மதியாக நாளைக் கழித்தார் என்றும், அவருக்கு இரத்தம் செலுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

திரு. கோவிந்தசாமிக்கு கடந்த ஞாயிறு இரத்தம் செலுத்தப்பட்டது. நேற்று முன்தினம் அவருக்கு அடிவயிற்றில் வீக்கமும் வலியும் கண்டது.

தெரிகிறது.

இத்தீர்மானம் அடுத்த வருடம் செயல்படுத்தப்படுமென அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# அநுராதபுரத்துக்கு உள்ளூராட்சி மன்றம்

அநுராதபுரம், ஞாயிறு

அநுராதபுர நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு ஓர் உள்ளூராட்சி மன்றம் அமைக்கப்படும். இதன் அந்தஸ்து எத்தகையது என இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா, வீடமைப்பு அமைச்சர் எம். டி. எச். ஜயவர்த்தனு ஆகிய இருவரும் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னரே அநுராதபுரத்துக்கு ஓர் உள்ளூராட்சிமன்றம் அமைக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இப்பொழுது அநுராதபுரத்தின் நிர்வாகம் பாதுகாப்புச் சபையினுல் கவனிக்கப்பட்டுவருகிறது. உள்ளூராட்சி அமைப்பொன்றின் கீழ் இந்நகரம் கொண்டுவரப்பட்டதும் புனிதநகரின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு அப்பகுதியை மாத்திரம் இப்பொழுதுள்ள பாதுகாப்புச்சபை கவனிக்கும். எஞ்சிய பகுதியின் நிர்வாகத்தை புதிதாக அமைக்கப்படும் உள்ளூராட்சி மன்றம் கவனிக்குமெனத்

## பிரிவுபசாரவிழா

அளவெட்டி, ஞாயிறு

வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச்செல்லும் திருமதி. கோவிந்தபிள்ளை, திருமதி. சிவராசா ஆகியோருக்கு வித்தியாலயத்தில் ஒரு பிரிவுபசாரவிழா நடத்தப்பட்டது.

ஆசிரியர். இ. நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற விழாவில் இவர்களின் சேவைகளைப்பாராட்டி செல்வன் அ. தவச்செல்வம், ஆசிரியை, அ. வேலுப்பிள்ளை, சு. தவலட்சுமி ஆகியோர் உரையாற்றினர்.

## மாணவர் தற்காலிக நீக்கம்

கொழும்பு, ஞாயிறு

கட்டுபத்தை உயர் தொழில் நுட்ப கலாசாலையின் 10 மாணவர்கள் கலாசாலையிலிருந்து தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கலாசாலைக்குச் சொந்தமான பொருள்களுக்கு பலத்த சேதம் விளைவித்ததாலேயே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.


## மரண அறிவித்தல்

கே. ஈ. இராமலிங்கம்

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி இளைப்பாறிய அதிபர் திரு. கே. ஈ. இராமலிங்கம் அவர்கள் காலமானுர். இவர் சங்கானையைச் சேர்ந்த திருமதி பாக்கியத்தின் கணவரும் திருவாளர்கள் மகேந்திரலிங்கம், சண்முகலிங்கம், சுந்தரலிங்கம், கணேசலிங்கம், பஞ்சலிங்கம், திருமதி தேனுமணி பாலரத்தினராஜா ஆகியோரின் தந்தையும் திரு. பாலரத்தினராஜா, திருமதிகள் மகேஸ்வரி, சுசீலா, சிவகாமி, வெங்கடேஸ்வரி ஆகியோரின் மாமனுருமாவார். அன்னுரது ஈமக்கிரியைகள் இன்று (12-5-69) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கானை கரைச்சி மயானத்தில் நடைபெறும்

11-5-69 து. தேவராசா

1413


இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org